# அத்தியாயம் – 3

# வேளாண்மை, மீன்பிடி மற்றும் காடாக்கல்

## 3.1 பொதுவான போக்குகள்

இலங்கை பல நூற்றாண்டுகளாக வேளாண்மையில் ஈடுபட்டிருந்தபோதிலும், அதனது வேளாண்மைத்துறை இன்னமும் ஒரு சில முக்கிய பயிர்களான நெல், தேயிலை, இறப்பர், தெங்கு மற்றும் ஒரு சில ஏனைய களப் பயிர்களிலேயே பெருமளவு செறிந்து காணப்படுகிறது. மக்களின் இவ்வித செறிவானது மக்களின் வருமானங்களை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களை குறுகச்செய்யும் வேளையில் அவர்களின் வாழ்க்கையை கொண்டு நடாத்துவதற்காக தனியொரு பயிரில் மட்டும் தங்கியிருக்கும் இடர்நேர்வினையும் ஏற்படுத்தியுள்ளது. இத்துறையின் குறுங்கால செயலாற்றமானது முக்கியமாக வானிலை நிலைமைகள் பாதுகாப்பு நிலவரம் மற்றும் பண்டங்களின் பன்னாட்டு விலைகள் என்பனவற்றிலேயே தங்கியிருக்கும். நீண்டகாலத்தில் இத்துறையின் வளர்ச்சியானது ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி முயற்சிகள், விரிவாக்கப்பணிகள், உட்கட்டமைப்பு வசதிகள், உள்நாட்டு வர்த்தகக் கொள்கை அரசாங்கத்தின் தலையீடு மற்றும் வேளாண்மை மீதான பன்னாட்டு வர்த்தகக் கொள்கைகள் என்பவற்றினால் தீர்மானிக்கப் படுகிறது.

**அட்டவணை 3.1**
**வேளாண்மை கால்நடை வளர்ப்பு காடாக்கம் மற்றும் மீன்பிடித்துறை- உற்பத்திச் சுட்டெண்கள் 1997 – 2000 காலப்பகுதியின் அடிப்படையில்**

| விடயம் | 2001 | 2002 | 2003 (அ) | 2002/ 2003 இல் மாற்றம் (%) |
|---|---|---|---|---|
| வேளாண்மை, மீன்பிடி(மொத்தம்) | 100.9 | 103.3 | 104.9 | 1.5 |
| 1. வேளாண்மை | 100.3 | 102.1 | 105.0 | 2.8 |
| 1.1. வேளாண்மைப்பயிர்கள் | 98.5 | 100.4 | 103.5 | 3.1 |
| தேயிலை | 103.1 | 108.3 | 108.0 | -0.3 |
| இறப்பர் | 89.3 | 93.9 | 95.4 | 1.6 |
| தெங்கு | 99.7 | 86.1 | 92.3 | 7.2 |
| நெல் | 101.1 | 107.3 | 115.1 | 7.3 |
| ஏனைய பயிர்கள் | 94.7 | 98.7 | 98.9 | 0.2 |
| 1.2 கால்நடை | 116.2 | 117.1 | 117.7 | 0.5 |
| 2. மீன்பிடி | 104.3 | 110.9 | 104.3 | -6.0 |

(அ) தற்காலிகமானவை மூலங்கள்: இலங்கை மத்திய வங்கி தொடர்பான அதிகார சபைகள்

கடந்த பத்தாண்டு காலத்தில் முக்கியமாக தனியார்துறையின் பங்கேற்பு அதிகரித்த காரணத்தினால் முக்கிய வேளாண்மைப் பயிர்களின் விளைச்சல் அதிகரித்தது. எனினும் அவை உள்ளார்ந்த விளைச்சலைக் காட்டிலும் குறைவானதாக இருந்தன. விதைகள், நடுகைப் பொருட்கள், காணிக்கொள்வனவு என்பனவற்றின் தாராளமயப்படுத்தலுடன் இணைந்து மற்றும் ஒழுங்கு விதியகற்றல் என்பன ஓரளவிற்கு அரச பண்ணைகளின் தனியார் மயப்படுத்தலுடன் இணைந்து வேளாண்மை உற்பத்தியில் தனியார் கம்பனித்துறையின் பாரிய ஈடுபாட்டுக்கு வழியமைத்தன. இதேவேளையில் வளர்ச்சியடையும் இறைக்கட்டுப்பாடுகளும் ஒன்றுக் கொன்று முரணான தேவைகளும் இலக்கிடப்படாத வேளாண்மை உதவித்தொகைகளை தொடர்ந்து வழங்குவது தாக்குப்பிடிக்க முடியாததென்பதனைச் சுட்டிக்காட்டின. உட்கட்டமைப்புத் தடைகளை தொடர்ந்தும் வேளாண்மை உற்பத்திகளின் சீரான பகிர்ந்தளிப்பினைக் கட்டுப்படுத்தியதன் மூலம் வேளாண்மையாளர்களுக்கு கிடைக்கத்தக்கதான இலாபத்தில் குறைப்பினை ஏற்படுத்தின. வர்த்தகக் கொள்கை அவ்வப்போதைக்கு மாற்றமுறும் நிச்சயமற்ற தன்மையை உருவாக்கி வேளாண்மையில் நீண்டகால தனியார் முதலீட்டினை ஊக்கமிளக்கச் செய்தன. இலங்கையின் வர்த்தக பங்காளி நாடுகள் சிலவற்றில் காணப்படும் வர்த்தக பாதுகாப்பு குறிப்பாக இறக்குமதிக் கட்டுப்பாடுகள் மற்றும் தேயிலை மீதான உயர் தீர்வை என்பன வர்த்தக ரீதியான வேளாண்மைப் பயிர்களிலிருந்து முழு நன்மைகளையும் பெற்றுக் கொள்ளக்கூடிய நாட்டின் ஆற்றலை குறைவடையச் செய்தன.

2003 இல் வேளாண்மை, கால்நடை வளர்ப்பு மற்றும் மீன்பிடித்துறை அளவு நியதிகளில் 1.5 சதவீத மொத்த வளர்ச்சியினையும் பதிவு செய்தது. சாதகமான வானிலை நெல் மற்றும் தெங்குத்துறைகளின் மீட்சிக்கு உதவியதெனினும் தேயிலை உற்பத்தி பெரும்பாலும் தாழ்நிலப் பகுதிகளில் மே மாதத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் பாதிப்படைந்தது. 2002 இன் ஆரம்பத்தில் சமாதான முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் வடக்கிலும் கிழக்கிலும் பாதிக்கப்பட்டிருந்த பகுதிகளில் ஏற்பட்ட சாதகமான பாதுகாப்பு நிலைமைகளிலிருந்து நெல் மற்றும் ஏனைய களப்பயிர்கள் நன்மையடைந்தன.

2003 இல் நெல், இறப்பர், தெங்கு மற்றும் ஏனைய பெரும்பாலான களப்பயிர்கள் என்பன நன்கு செயலாற்றி வேளாண்மைத் துறையின் பொதுவான வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்தன. 2000 இன் 2,860 ஆயிரம் மெற்றிக் தொன் கொண்ட முன்னைய உச்ச வெளியீட்டினை 7 சதவீதத்தால் விஞ்சி முன்னெப் பொழுதுமிராத உயர் மட்டத்தை அடைந்தது.

சிறந்த பருவக்காற்று மற்றும் வடகிழக்கில் மேம்பட்ட பாதுகாப்பு நிலைமைகள் என்பவற்றிலிருந்து பயனடைந்து பெரும்போக மற்றும் சிறுபோக பருவங்களில் விதைக்கப்பட்ட மற்றும் அறுவடை செய்யப்பட்ட பரப்பளவுகள் விரிவடைந்தன. ஏனைய

சிறப்புக்குறிப்பு 7

## இலங்கையில் வேளாண்மை, கால்நடை, மீன்பிடித் துறைகளுக்கான ஒரு உற்பத்திச் சுட்டெண் மதிப்பீடு

### அறிமுகம்

வேளாண்மை என்பது பல்லினத் தன்மை கொண்ட பல உபபிரிவுகளைக் கொண்டுள்ளது. இதனால், இத்துறையின் ஒட்டுமொத்த செயற்பாடுகளை மதிப்பீடு செய்வது மிகவும் கடினமான காரியமாகும். இவ் இடர்ப்பாட்டை நிவர்த்தி செய்வதற்கான ஒரு வழி ஒவ்வொரு பல்லினத்தன்மை கொண்ட உபபிரிவுகளுக்கும் உரிய நிறையை வழங்கி உற்பத்திச் சுட்டெண்ணைக் கணித்தலாகும்.

உற்பத்திச் சுட்டெண்கள் பல்வேறு நோக்கங்களுக்காக கணிக்கப்படுகின்றன. உள்ளடக்கம், நிறைகள், மற்றும் அடிப்படையாண்டுத் தெரிவு என்பன வேறுபடுவதற்கேற்ப வெவ்வேறு முகவரமைப்புக்களால் தொகுக்கப்படும் சுட்டெண்கள் ஒன்றிற்கொன்று வேறுபடலாம். உதாரணமாக, உணவு, வேளாண்மை அமைப்பு பல்வேறு நாடுகளின் வேளாண்மை உற்பத்திகள் தொடர்பான சுட்டெண்களைக் கணிக்கின்றது. இது ஒவ்வொரு வருடத்துக்குமான வேளாண்மை உற்பத்திகளின் ஒட்டுமொத்த அளவுடன் தொடர்பான மட்டத்தை 1989-1991 எனும் அடிப்படைக் காலகட்டத்துடன் ஒப்பிட்டுக் காட்டுகின்றது. உணவு வேளாண்மை அமைப்பின் உற்பத்திச் சுட்டெண்ணின் பிரதான வகைகள் விலங்குணவுப் பயிர்கள் தவிர்ந்த தானியவகை, பயிர்கள், உணவு, கால்நடை, உணவல்லாப் பொருட்கள் என்பவற்றை உள்ளடக்குகின்றன. உணவு வேளாண்மை அமைப்பின் சுட்டெண்களில் உற்பத்தி அளவுகள் விதை மற்றும் உணவு எனப் பிரயோகிக்கப் பட்ட அளவுகளைக் கழித்த பின்பே கணிக்கப்படுகின்றன. ஆகவே, சுட்டெண்ணானது விதை மற்றும் உணவு தவிர்ந்த வேறு எந்தப் பாவனைக்குமென எடுக்கப்படக்கூடிய உற்பத்தியையே குறிக்கின்றது. இலங்கை தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களம் வேளாண்மை மற்றும் கால்நடை உற்பத்தி தொடர்பான அளவுச் சுட்டெண்ணை வருடாந்தம் கணிக்கின்றது. அவர்கள் தேயிலை, இறப்பர், தென்னை, நெல், மேட்டு நிலப்பயிர்கள், கால்நடை, சிறுஏற்றுமதிப் பயிர்கள் மற்றும் ஒட்டுமொத்த சுட்டெண் என வெவ்வேறான சுட்டெண்களைக் கணிக்கின்றனர். இருப்பினும், இச்சுட்டெண் கிட்டத்தட்ட இரண்டு வருட காலத் தாமதத்துடன் கணிக்கப்படுகின்றது. இதனால், வேளாண்மைத் துறையின் செயற்பாட்டை மதிப்பீடு செய்வதற்காக வேளாண்மைத்துறையின் சகல முக்கிய உபபிரிவுகளையும் உள்ளடக்கும் வகையில் சரியான சுட்டெண்ணை விருத்தி செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ளது. இலங்கை மத்திய வங்கி நாணயக் கொள்கை நோக்கங்களுக்குத் தேவைப்படுகின்ற பகுப்பாய்வை வசதிப்படுத்துவதற்காக இதனை கணிப்பிட முன்வந்தது.

### சுட்டெண்களின் உள்ளடக்கம்

இலங்கை மத்திய வங்கியினால் உருவாக்கப்பட்ட வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் விவசாயம், கால்நடை, மற்றும் மீன்பிடி எனும் மூன்று உபபிரிவுகளை உள்ளடக்குகின்றது. ஒவ்வொரு உபபிரிவும் பல உப வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. வேளாண்மைப் பிரிவு பெருந்தோட்டப் பயிர்கள், உள்நாட்டு வேளாண்மையில் முதன்மை வாய்ந்த பயிரான நெல், காய்கறிகள், பழவகைகள், ஏற்றுமதி வேளாண்மைப் பயிர்கள், கரும்பு, புகையிலை மற்றும் ஏனைய களப்பயிர்கள் கொண்ட ஏனைய பயிர் வகைகள் போன்றவற்றை உள்ளடக்குகின்றது. கால்நடைப் பிரிவானது இறைச்சி, பால் மற்றும் முட்டை உற்பத்திகளை உள்ளடக்குகின்றது. மீன்பிடித்துறை கடல்நீர், உள்நாட்டு நீர் அத்துடன் பண்ணை மீன் உற்பத்தி என்பவற்றை உள்ளடக்கு கிறது. மொத்தச் சுட்டெண் வருடாந்த அடிப்படையில் வகுக்கப்படுகிறது. இருப்பினும், நெல், காய்கறிவகை மற்றும் ஏனைய களப்பயிர் உபதுறைகள் தொடர்பான சுட்டெண்கள் அரைவருடத்துக்கொருமுறை வகுக்கப்படும் அதேவேளை பெருந்தோட்ட உபதுறைக்கானது காலாண்டு அடிப்படையில் வகுக்கப்படுகிறது.

### கணிப்பு முறை

வருடாந்தச் சுட்டெண்ணுக்காக 1997-2000 காலப்பகுதிக்கான சராசரிப் பெறுமதிகள் அடிப்படைப் பெறுமதிகளாகப் பயன்படுத்தப்பட்டன. பருவகால உற்பத்தி முறைகளையும் மற்றும் காலநிலை மாற்றங்களுக்கேற்ப ஏற்படும் வேறுபாடுகளையும் தவிர்ப்பதற்காக நான்கு வருடங்களின் சராசரி கருத்திற் கொள்ளப்பட்டது. அரை மற்றும் காலாண்டுச் சுட்டெண்களுக்கான, அடிப்படைப் பெறுமானங்கள் வருடாந்த பெறுமானங்களும் அளவுகளும் முறையே இரு சமபாகங்களாகவும் நான்கு பாகங்களாகவும் பிரிக்கப்படுவதன் மூலம் கணிக்கப்பட்டன.

சிறப்புக்குறிப்பு 7 தொடர்ச்சி

அளவுச் சுட்டெண் லெஸ்பெயர் அளவுச் சுட்டெண்ணாகக் [1] கணிக்கப்பட்டுள்ளது. ஏதேனும் பெறுமதிகள் காட்டப்பட முன்னரான முதனிலை அமைப்பிலுள்ள பொருட்களைப் பாவித்தே அளவுச்சுட்டெண் கணிக்கப்படுகிறது. பதனிடப்பட்ட நிலைமையிலான தரவுகள் எங்கெங்கே கிடைக்கப் பெறுகின்றனவோ, சம்பந்தப்பட்ட மாற்றுக் காரணிகளைப் பயன்படுத்தி (உ+ம் தேயிலைக்கு பச்சை இலை, இறப்பருக்கு உலர்ந்த இறப்பர் உள்ளடக்கம், தென்னைக்கு புதிய தேங்காய் முதலியன) அவை முதனிலை உற்பத்திகளாக மாற்றப்பட்டன.

பெறுமதிச்சுட்டெண் ஆனது நடைமுறைக்காலம் மற்றும் அடிப்படைக்காலம் [2] என்பவற்றுக்கிடையேயான பெறுமதிகளின் விகிதாசாரத்தின் சாதாரண சுட்டெண்ணாகக் கணிக்கப்பட்டது.

விலைச்சுட்டெண்ணானது பெறுமதிச்சுட்டெண் மற்றும் அளவுச்சுட்டெண் என்பவற்றுக்கிடையேயான விகிதாசாரமாகக் கணிக்கப்படுகிறது. இதுவே பாச்சே சுட்டெண்[3] ஆகிறது.

சுட்டெண்ணின் உள்ளடக்கம் தரவுகளின் கிடைப்பனவினால் மட்டுப்படுத்தப்படுகிறது. தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்தில் கிடைக்கப்பெறும் உற்பத்தித் தரவுகள் நாட்டில் செய்கை பண்ணப்படும் சகல மரக்கறி,பழ, ஏனைய பயிர் வகைகளையெல்லாம் உள்ளடக்குவன அல்ல. தரவுகள் கிடைக்கப் பெறுமிடங்களில் உற்பத்தியாளர் விலை/ கீழ்மட்ட விலை பயன்படுத்தப்படுகிறது. விலைத்தரவுகள் கிடைக்கப்பெறாதவிடத்து, மொத்த மற்றும் சில்லறை விலைகள் பயன்படுத்தப்பட்டு ஒப்பிடத்தகு உற்பத்தியாளர் விலைகள் கணிக்கப் படுகின்றன. நெல்லின் சராசரி உற்பத்தியாளர் விலை மாவட்ட தரவுகளைப் பாவித்து கணிக்கப்படுகின்றது. ஏனைய பருவப் பயிர்களுக்கு முழுநாட்டினதும் சராசரி உற்பத்தி விலை பயன்படுத்தப்படுகிறது.

## சுட்டெண்கள் பற்றிய பகுப்பாய்வு

வேளாண்மை அளவுச்சுட்டெண் பெருமளவில் பெருந்தோட்டப் பயிர்கள் மற்றும் நெற்பயிர்த் துறை என்பவற்றைப் பிரதிபலிக்கின்றது. நெல், தேயிலை மற்றும் தென்னை என்பன வரைபடம் 1 இல் காட்டப்பட்டவாறு வேளாண்மை உற்பத்திகளில் 50 சதவீதத்துக்கும் மேற்பட்ட அளவை பங்களிப்புச் செய்துள்ளன.

மொத்தச் சுட்டெண் வரட்சி காரணமாக 2001 இல் ஏற்பட்ட தற்காலிக பின்னடைவைத் தவிர வளர்ச்சிப்போக்கையே காட்டுகின்றது. 2000 ஆம் ஆண்டில் ஆகக்கூடிய பெறுமதியை நெல், தேயிலை மற்றும் தென்னையின் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக பதிவு செய்தது. 2002 இல் இத்துறை அதிகரித்த நெல் அறுவடை, அதியுச்ச தேயிலைப் பயிர் காரணமாக மீட்சி பெற்றது. 2003 இல் நெல் அறுவடையில் கணிசமானளவு அதிகரிப்பு ஏற்பட்டதன் காரணமாக, மொத்த வேளாண்மை உற்பத்திச் சுட்டெண் வரைபடம் 2இல் காட்டப்பட்டுள்ளவாறு இதுவரை காலத்திலானதைவிட அதியுயர் பெறுமதியை அடைந்தது. மிளகாய், வெங்காயம், உழுந்து, தட்டைப்பயறு, பயறு, சோளம் மற்றும் சிலவகை பழங்கள், கரும்பு போன்ற ஏனைய உணவுப்பயிர்களின் வெளியீட்டிலேற்பட்ட வீழ்ச்சி காரணமாக, ஏனைய வேளாண்மைத்துறையின் அளவுச்சுட்டெண் அடிப்படைக் காலகட்டத்துடன் ஒப்பிடுமிடத்து, அண்மைக்காலங்களில் வீழ்ச்சியைக் காட்டியுள்ளது. கோழி வளர்ப்புத்துறையில் தனியார் துறையினரின் அதீத ஈடுபாடு காரணமாக அண்மைக் காலங்களில் கோழிஇறைச்சி, முட்டை உற்பத்தியில் அதிகரிப்பு ஏற்பட்டதன் காரணமாக கால்நடை உற்பத்தி அதிகரித்த போக்கைக் காட்டியுள்ளது. உடன்பாலுக்கு கொடுப்பனவு செய்யப்பட்ட விலையின்

வரைபடம் 1
முக்கிய வகைகளின் பெறுமதிப் பங்கு
(1997 - 2000 சராசரி)




வரைபடம் 2
பொதுவான ஆண்டுச் சுட்டெண் - வேளாண்மை, கால்நடை வளர்ப்பு, மீன்பிடி (அடிப்படை 1997 - 2000)



*சிறப்புக்குறிப்பு 7 தொடர்ச்சி*

வரைபடம் 3
ஆண்டு உற்பத்தி அளவுச் சுட்டெண்கள்
(முக்கிய வகைகள் (1997 - 2000 அடிப்படை)




வரைபடம் 4
ஆண்டு வேளாண்மை விலைச் சுட்டெண்கள்
(முக்கிய வகைகள் (1997 - 2000 அடிப்படை)




அதிகரிப்பு, பால் சேகரிப்பு நடவடிக்கைகளில் மேற்கொள்ளப்பட்ட முன்னேற்றங்கள் காரணமாக பால் உற்பத்தியும் அதிகரித்துள்ளது.

2000 இல் தெங்குப்பொருள் விலைகளும் நெல்லின் விலைகளும் அமோக அறுவடை காரணமாகக் குறைவாக இருந்தன. இது 2000 இன் பெறுமதி, மற்றும் விலைச்சுட்டெண்களில் பிரதி பலித்தது. பயிர்களின் துணைத்துறை போலன்றி, கால்நடை மற்றும் மீன்பிடி துணைத்துறை விலை அத்துடன் பெறுமதிச் சுட்டெண்கள் தொடர்ந்தும் அதிகரித்திருந்தன.

1. வருடத்துக்கான லெஸ்பெயர்ஸ் சுட்டெண் தரப்படுவது $Q_t = \frac{\sum p_{i0} q_{it}}{\sum_i p_{i0} q_{i0}} \times 100$ இதில் $p_{i0}$ என்பது i ஆவது பண்டத்தின் அடிப்படை வருட விலை $q_{i0}$ என்பது i பண்டத்தின் அடிப்படை வருட அளவாக இருக்கும்; $q_{it}$ என்பது i பண்டத்தின் t வருடத்தின் அளவாக இருக்கும். தனிப்பட்ட விடயங்கள் இனரீதியான உபபிரிவுப் பொருட்கள்/ உற்பத்திகள் எனபன தொடர்பான சுட்டெண்கள் பெற ப்படுவதற்கு, நடைமுறை ஆண்டுக்கான அளவுகள் அவற்றுடன் தொடர்பான அடிப்படை அளவுகளால் பிரிக்கப்படும். இனரீதியான உபபிரிவு விடயங்களில், லெஸ்பெயர்ஸ் சுட்டெண் பிரயோகிக்கப்பட்டு உபபிரிவு சுட்டெண் கணிக்கப்பட்டுள்ளது.

2. சுட்டெண் இவ்வாறு வரையறுக்கப்பட்டுள்ளது $V_t = \frac{\sum_i p_{it} q_{it}}{\sum_i p_{i0} q_{i0}} \times 100$ $p_{it}$ மற்றும் $q_{it}$ என்பன t காலத்தில் i ஆவது பொருளின் விலையாகவும் அளவாகவும் உள்ளபோது முறையே $p_{i0}$ மற்றும் $q_{i0}$ என்பன அடிப்படை ஆண்டினபோது i பொருளின் விலை மற்றும் அளவு ஆகும். ஒவ்வொரு தனிப்பட்ட பொருளின்/ உற்பத்தியின், உபபிரிவுப் பொருட்களின் உபவகை மற்றும் முக்கிய வகைகளின் வருடாந்த/ அரை வருடாந்த/ காலாண்டு பெறுமதிகள் அவற்றின் தொடாபான அடிப்படைப் பெறுமதிகளினால் வகுக்கப்பட்டுள்ளன.

3. பாச்சே சுட்டெண் தரப்படுவது $p_t = \frac{\sum_i p_{it} q_{it}}{\sum_i p_{i0} q_{it}} \times 100$

4. தரவுப் பற்றாக்குறை காரணமாக, உண்ணத்தகு பச்சை இலைத் தாவரங்கள், மூலிகைச் செடிகள், மலர்ச்செடிகள், மர இலைத் தாவரங்கள், மூங்கில், பிரம்பு, நார், மசாலை போன்ற தாவரப்பொருட்கள் மற்றும் காட்டு உற்பத்திகள் போன்றன தவிர்க்கப்பட வேண்டியனவாகும்.

களப்பயிர்களும் 2003 இல் சிறப்பாக செயலாற்றின. ஆனால் உருளைக்கிழங்கும் பெரிய வெங்காயமும் அவ்வாறு செயலாற்றத் தவறிவிட்டன.

இதேவேளை மரப் பயிர்த்துறை 2003 காலப் பகுதியில் கலப்பான பெறுபேறுகளை பதிவு செய்தது. தெங்கு உற்பத்தி பத்தாண்டுக் காலத்தில் எதிர் கொள்ளப்பட்ட 2002 இன் ஆகக் குறைந்த உற்பத்தி யிலிருந்து மீட்சி பெற்று 7 சதவீதத்தால் அதிகரித்தது. இறப்பர் உற்பத்தி கவர்ச்சிகரமான விலைகளுக்கு சாதகமாக பதிலிறுத்து 2 சதவீதத்தால் அதிகரித்தது. முன்னெப்பொழுதுமில்லாத அதிகூடிய வெளியீட்டை 2002 இல் பதிவு செய்திருந்த தேயிலை உற்பத்திப் 2003 இல் பின்னடைவினைக் கொண்டிருந்தது. தேயிலைச் சந்தையை தற்காலிகமாக பாதிப்புறச் செய்த ஈராக்கிய யுத்தம் தாழ்நில தேயிலை உற்பத்திப் பிரதேசங்களை மோசமாகப் பாதித்தது. ஆண்டின் நடுப்பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்குகள் மற்றும் மண்சரிவுகள் என்பனவே இப்பின்னடைவின் முக்கிய காரணங்களாகும். இதேவேளை சீனி உற்பத்தியானது பெலவத்தை, செவனகல ஆகிய இரண்டினதும் பெரும்பான்மைப் பங்குடைமைகள் தனியார் மயமாக்கப்பட்டதிலிருந்து தோன்றி சாதகமான ஊக்குவிப்புக்களின் நேரடி விளைவாக தொடர்ச்சியான மூன்று ஆண்டுகளாக உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியிலிருந்து மீட்சியடைந்து 2003 இல் 45 சதவீதத்தால் அதிகரித்தது.

### 3.2 வேளாண்மைக் கொள்கையும் நிறுவனரீதியான உதவியும்

எந்தவொரு பொருளாதாரத்திலும் வேளாண்மைக் கொள்கையானது வேளாண்மையில் ஈடுபட்டிருக்கும் வேளாண்மையாளர்களை பாதுகாப்பதுடன் போட்டி நாடுகளுடன் வெற்றிகரமாக போட்டியிடுவதற்கான தகுதியின்மையைக் கொண்ட ஆற்றல் மிக்க நீடித்திருக்கக்கூடிய வேளாண்மைத்துறையினை அபிவிருத்தி செய்வதினை நோக்காகக் கொண்டிருத்தல் வேண்டும். இந்தக் குறிக்கோளினை எய்துவதற்கு அத்தியாவசியமான தேவைப்பாடாக அதன் சராசரி செலவின போட்டித்தன்மை மிக்க தாழ்ந்த மட்டத்தில் பேணுவதற்காக புதிய தொழில்நுட்பத்தினை ஈர்த்துக்கொள்வதன் மூலம் உற்பத்தியை அதிகரிப் பதற்காக ஒரு துறையின் நெகிழ்வுத் தன்மையும், ஏற்புத்தன்மையும் விளங்குகின்றது. அத்தகைய வேளாண்மைக் கொள்கைகள் பொதுவான வேளாண்மை ஆராய்ச்சி புதிய தொழில்நுட்பமும் அதனை செலவின்றி மாற்றல் செய்தல், பயிர்களை பன்முகப்படுத்தல், தாராளமயமாக்கல், ஒழுங்கு விதியகற்றல் மற்றும் தனியார் மயப்படுத்தல் விலை உறுதிப்பாடு உள்ளீட்டு முகாமைத்துவ உதவித்தொகை மற்றும் விரிவாக்கப் பணிகள் மற்றும் அபிவிருத்திக்கான சுற்றாடல் பாதுகாப்பு என்பவற்றினூடாக ஊக்கு விப்புக்களை வழங்கல் ஆகிய பரந்த வீச்சிலான விடயங்களை உள்ளடக்குகின்றன. தொடர்ச்சியான வெளி ஆதரவின்றி இத்துறை முன்னேறிச்செல்லும் வகையில் இந்த அனைத்துக் கொள்கைகளும் அத்தியாவசியமான ஊக்குவிப்பு கட்டமைப்பினை நிறுவுதல் வேண்டும். நாட்டின் வேளாண்மைக் கொள்கையானது வேளாண்மை மற்றும் கால்நடை அமைச்சு, வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் கொள்கைக்கான சபை என்பனவற்றினால் வெளியிடப்பட்ட இரு அறிக்கைகளிலும் குறிப் பிடப்பட்டுள்ளது. தேசிய பொருளாதாரத்திற்கான பங்களிப்பு மற்றும் முதலீட்டிற்கான விளைவு என்ப வற்றினை உள்ளார்ந்த வளத்திற்கு பெருமளவு குறைவாக கொண்டிருந்த வேளாண்மைத்துறையை முன்னேற்றுவதில் கொள்கை முனைப்புக் கொண்டுள்ளது.

வேளாண்மை, கால்நடை அமைச்சினால் வரைவு செய்யப்பட்ட 2003 இலிருந்து 2010 வரையான காலப்பகுதிக்கான வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்பு மீதான தேசிய கொள்கையானது உள்நாட்டு வேளாண்மை கால்நடை தொழில்துறையினை உறுதிவாய்ந்த, வலுவான பொருளாதார சக்தியாக மாற்றுவதற்கு மனித வளங்களை அபிவிருத்தி செய்தல் மற்றும் அரசதுறையினதும் தனியார் துறையினதும் ஈடுபாட்டினை ஒன்றுதிரட்டுவதற்கான தேவையை வலியுறுத்துகின்றது. நில விரிவாக்கம் வரையறுக்கப் பட்டிருப்பதனால் உற்பத்தித் தொழில் நுட்பத்தின் செறிவுபடுத்தல் முன்னுரிமை பெறுகின்றது. இதனை மேலும் வலுப்படுத்துவதற்காக வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் கொள்கை சபையினால் உருவாக்கப்பட்ட தேசிய தேவையாக ஆராய்ச்சிக் கொள்கை விளங்குகிறது. இது தாவர இனவிருத்தி, பயிர் அபிவிருத்தி, கலப்பின விதை அபிவிருத்தி ஒருங்கிணைந்த நோய்த்தடுப்பு முகாமைத்துவம், சேதன கிருமிநாசினிகள் மற்றும் சேதன வளமாக்கி அபிவிருத்தி, நீர்ப்பாசன நீர் முகாமைத்துவம், வளமாக்கல் முகாமைத்துவம், பழம் மற்றும் மலர்ச்செய்கை அபிவிருத்தி மற்றும் அறுவடைக்குப் பின்னரான பதனிடல் போன்ற துறைகளிலான கேள்வியினால் தூண்டப்படும் தொழில்நுட்ப அபிவிருத்தி என்பவற்றுக்கான தேவையினை வலியுறுத்துகிறது. இக்கொள்கையானது விரிவாக்கப் பணிகளை ஒழுங்கு முறைப்படுத்தி தகவல்களையும் தொழில்நுட்பங்களையும் பரவச்செய்யும் செயன்முறைகளை மேம்படுத்தவதற்கும் முனைந்தது.

வேளாண்மை மற்றும் கால்நடை வளர்ப்பு மீதான தேசிய கொள்கையில் இனம் காணப்பட்ட ஏனைய முக்கிய சீர்திருத்தத் துறைகளாக வேளாண்மைத்துறையில் தனியார் தொழில் முனைவோர்களது பங்களிப்பினை உயர்த்தும் வகையிலான சந்தைச் சீர்திருத்தங்கள், உணவு பதனிடல் கைத்தொழில் துறையுடனான நெருங்கிய

ஒருங்கிணைப்பு மூலவளங்களின் பாதுகாப்பு மற்றும் முறையான பயன்பாடு என்பன விளங்குகின்றன.

2003 இல் அரசாங்கத்தின் முயற்சிகள், உற்பத்தித்திறன் மேம்பாடு மற்றும் பயிர் பன்முகப்படுத்தல், சந்தைப்படுத்தல், உட்கட்டமைப்பினை மேம்படுத்தல், தனியார்துறை பங்கேற்பினை அதிகரித்தல், உள்ளீட்டு முகாமைத்துவம் மற்றும் வேளாண்மை, பொருட்களின் விலைகளை உறுதிப்படுத்தல் என்பன வற்றில் கவனத்தைச் செலுத்தின.

விளைச்சல் திறனை மேம்படுத்தி, பயிர்களை பன்முகப்படுத்தலை நோக்காகக் கொண்டு வேளாண்மை ஆராய்ச்சி மற்றும் கொள்கைக்கான சபை தாவர அபிவிருத்தி தாவர நோய் பற்றிய ஆய்வு, உணவுத் தொழில்நுட்பம், மண் மற்றும் வளமாக்கி அபிவிருத்தி, பயிராக்கல் கலை, அலங்கார செடி வளர்ப்பு மற்றும் தாவர பாதுகாப்பு போன்ற துறைகளில் பல தரப்பட்ட ஆராய்ச்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் துறையினரால் நடாத்தப்பட்ட 83 ஆராய்ச்சிச் செயற்றிட்டங்களுக்காக 2003 இல் ரூ.118 மில்லியனை வழங்கியது.

சந்தைப்படுத்தல் உட்கட்டமைப்புக்களை அபிவிருத்தி செய்யும் வகையில் 2003 இல் மீகொடவிலும், எம்பிலிப்பிட்டியவிலும் இரு சிறப்புப் பொருளாதார நிலையங்கள் அபிவிருத்தி செய்யப்பட்டன. இந் நிலையங்கள் வேளாண்மையாளர்களுக்கு தங்கள் உற்பத்திகளை சில்லறை மற்றும் மொத்த விற்பனை யாளர்களுக்கு நேரடியாக விற்பனை செய்வதற்கான வசதிமிக்க வர்த்தக மையங்களை வழங்கின. இதன் மூலம் வேளாண்மையாளர்கள் தங்கள் உற்பத்திகளுக்கு சிறந்த விலைகளைப் பெற்றுக்கொண்டனர். இலங்கை மத்திய வங்கி முன்னோக்கிய விற்பனை ஒப்பந்தத் திட்டத்தை பிரபல்யப்படுத்தும் முயற்சியினைத் தொடர்ந்து மேற் கொண்டது. இத்திட்டத்தின் மேலுமொரு அம்சமாக பங்கேற்கும் வங்கிகள் ஊடாக உற்பத்தியாளரும் வாங்குநரும் கொடுகடன்களைப் பெற்றுக்கொள்வதற்கான வசதியளிப்பு விளங்கியது.

2003 இல் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட விதைச்சட்டம் சிறந்த தரமிக்க விதைகளையும் பயிரிடல் பொருட்களையும் பெற்றுக்கொள்வதற்கான வேளாண்மையாளர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வேளையில் விதை மற்றும் பயிரிடல் பொருட்களின் உற்பத்தித் தொழில் துறையின் தரங்களை மேம்பாடுறச் செய்யும்.

ஈராக் யுத்த காலத்தில் விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியின் காரணமாக தனியார் தேயிலைத் தொழிற்சாலை உரிமையாளர்கள் எதிர்நோக்கிய நிதிப் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக இலங்கைத் தேயிலைச்சபை தொழிற்படு மூலதனக் கடன்கள் மீது 50 சதவீதம் கொண்ட வட்டி உதவித்தொகையினை வழங்கியது. வெள்ளப்பெருக்கினால் பாதிப்படைந்த பொறி கருவிகளின் திருத்தங்களுக்காக தொழிற்சாலை உரிமையாளரிடையே கொடுப்பனவு செய்வதற்காக ரூ.10 மில்லியன் தொகையினையும் இலங்கை தேயிலைச்சபை ஒதுக்கியது. காலி, மாத்தறை, இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலுள்ள தேயிலை தொழிற்சாலை உரிமையாளர்களுக்கு 2003 மேயில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின் காரணமாக பச்சைக் கொழுந்து மற்றும் தயாரிக்கப்பட்ட தேயிலை இருப்புக்களில் ஏற்பட்ட இழப்புக்காக அரசாங்கம் ரூ.45.7 மில்லியனை இழப்பீடாகச் செலுத்தியது.

2003 இல் வளமாக்கி உதவித்தொகைத் திட்டம் தொடர்ந்து தொழிற்பட்டதுடன் பன்னாட்டு விலைகளை கருத்திற்கொள்ளாது யூரியாவிற்கு மெற்றிக் தொன்னொன்றிற்கு ரூ.6,000/- கொண்ட நிலையான தொகையொன்று வழங்கப்பட்டது. எதிர்பார்த்தபடியே பன்னாட்டு விலைகள் குறைவாகவிருந்தபொழுது புதிய திட்டம் இறக்குமதிகளை ஊக்குவித்தது.

அரசாங்கம் வேளாண்மை அபிவிருத்தியில் தனியார்துறையினர் பங்குபற்றுதலை மேம்படுத்து வதற்கென சிறப்பான முயற்சிகளை மேற்கொண்டது. தேயிலைக் கைத்தொழிலுக்கான மைய அமைப் பொன்றாக தேயிலைக் கைத்தொழிலின் ஆறு முக்கிய நலவுரித்துக்களைக் கொண்டவர்களான இலங்கை சம்மேளனமொன்றாக இலங்கை தேயிலைச் சங்கம் உருவாக்கப்பட்டது. இந்நலவுரித்து உடமையாளர்களாக துரைமார்கள் சங்கம், கொழும்பு தேயிலைச் வர்த்தகர்கள் சங்கம், தேயிலை ஏற்றுமதியாளர் சங்கம், இலங்கை தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்திச் சங்கங்களின் சம்மேளனம், தனியார் தேயிலைத் தொழிற்சாலைகளின் உரிமையாளர்கள் சங்கம், கொழும்பு தரகர்கள் சங்கம் என்பன விளங்குகின்றன. இந்தச் சங்கத்திற்கு ஆசிய அபிவிருத்தி வங்கியினால் பெருந்தோட்ட அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நிதியிடப்படும். ஆரம்பத்தில் பெருமளவு தனியார்துறை பங்குபற்றலுக்கு வழிவகுக்கும் வகையில் பாராளுமன்றம் இறப்பர் ஆராய்ச்சிச் சபையின் உறுப்பினர்களின் எண்ணிக்கையை பதினொன்றாக அதிகரிப்பதற்கான மசோதாவினை நிறைவேற்றியது. அப் பதினொரு உறுப்பினர்களுள் ஏழு பேர் இறப்பர் கைத்தொழிலுள்ள பல்வேறு துறைகளை பிரதி நிதித்துவப்படுத்தும் வகையில் தனியார் துறையிலிருந்து நியமிக்கப்படுவர்.

2003 இல் 13 பிரதேச பெருந்தோட்டக் கம்பனிகளில் கடப்பாட்டு உரிமையைக் கொண்டிருக்கும் பத்து முகாமைத்துவ முகவர்கள், முகாமைத்துவ கட்டணங்களினை 50 சதவீதத்திலிருந்து 10-20 சதவீதத் திற்கு குறைப்பதற்கு உடன்பட்டனர். குறைந்த கட்டண

கட்டமைப்பானது வட்டிக் கொடுப்பனவு, கம்பனி வரி, பெறுமானத்தேய்வு, கடன் தீர்ப்பனவு என்பவற்றுக்கு முன்னரான இலாபத்தின் சதவீதத்தினை அடிப்படையாகக் கொண்ட சூத்திரமொன்றினை பின்பற்றுவதுடன் 2004 இலிருந்து ஐந்து ஆண்டுகள் கொண்ட காலப்பகுதியினை உள்ளடக்கியிருக்கும். இந்தக் கட்டணமானது இவ்வுடன்படிக்கையின் இறுதி ஆண்டான 2008 அளவில் 10 சதவீதம் கொண்ட குறைந்த மட்டத்தில் படிப்படியாக குறைக்கப்படும். இப்புதிய கட்டமைப்பினை பின்பற்றும் கம்பனிகள் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்படும் ஐ.அ.டொலர் 135 மில்லியன் கொண்ட கடன் திட்டத்தின் கீழ் சலுகை ரீதியான வட்டி வீதத்தில் கொடுகடனை பெறுவதற்குத் தகுதிபெறும்.

2003 இல் தேசிய கால்நடை வளர்ப்பு அபிவிருத்தி சபையின் நட்டத்தில் இயங்கும் ஒன்பது பண்ணைகளை தனியார் மயமாக்கல் அல்லது முகாமைத்துவ முகவரை நியமிப்பதன் வாயிலாக மீளவமைப்பதற்கு அமைச்சரவை ஒப்புதலளித்தது. அடையாளம் காணப்பட்ட பண்ணைகளாக ரிதிகம பண்ணை, கண்டகதுவ பண்ணை (வடமத்திய), கண்டகடுவ பண்ணை (தெற்கு), கரகம பண்ணை, இபில் இபில் பண்ணை, மார்ட்டின் பண்ணை, வெலிக்கந்த பண்ணை, கொடுக்கச்சிய பண்ணை மற்றும் பரசங்கவெவ பண்ணை என்பன விளங்குகின்றன.

தீர்வைப்பக்கத்தில் அரிசி மீதான சிறப்புத்தீர்வை 2003 மாச்சு 5 இல் கிலோகிறாமொன்றிற்கு ரூ.5 இலிருந்து கிலோகிறாமொன்றிற்கு ரூ.7 ஆக அதிகரிக்கப்பட்டதுடன் 2003 ஒகத்து 21 இல் இது கிலோகிறாமொன்றிற்கு ரூ.9 ஆக அதிகரிக்கப்பட்டது. 2003 செத்தெம்பர் 4 இலிலிருந்து பெரிய வெங்காயத்தின் மீதான கிலோகிறாமொன்றிலான ரூ.6 கொண்ட சிறப்புத்தீர்வையும், சீனி மீதான கிலோகிறாமொன்றிற்கான ரூ.3.50 கொண்ட சிறப்புத்தீர்வையும் முறையே கிலோகிறாமொன்றிற்கு ரூ.8 ஆகவும், ரூ.3.75 ஆகவும் உயர்த்தப்பட்டது.

வேளாண்மைத்துறையானது படிப்படியான தாராளமயமாக்கம், திறந்த தன்மை மற்றும் உலகமயமாக்கல் என்பவற்றிலிருந்து எழும் புதிய பிரச்சினைகளையும் சவால்களையும் எதிர்நோக்குகிறது. மாறுபாடடையும் கொள்கை மற்றும் தாராளமயமாக்கல் நன்கு குறித்துரைக்கப்பட்ட கால எல்லையினை கொண்டிராமை என்பன இத்துறையிலான முதலீட்டினை பாதித்தன. வேளாண்மைத் தொழிலாளர்களுக்கான பற்றாக்குறை தொடர்ந்தும் கடும் பிரச்சினையாக இருக்கும். நிலம் துண்டாடப்படலானது இப்பிரச்சினையை மேலும் மோசமாக்கும். ஏனெனில் அது இயந்திரப் பாவனைகளினூடான தொழிலாளரை பதிலீடு செய்யப்படுவதை அனுமதித்துள்ளது. இலங்கையின் வேளாண்மைத்துறை சுயமாக தோற்றம் பெற்றுவரும் பன்னாட்டு மற்றும் உள்நாட்டு நிகழ்வுகளிலிருந்து ஆக்கபூர்வமான அழிவுகளிலிருந்து எழும் சக்திகளை எதிர்ப்பது பெருமளவில் கடினமாக இருக்கும். எனினும் ஒரு சாதகமான பேரண்டப் பொருளாதாரச் சூழலை தொடர்ந்து உருவாக்கும்வேளையில் இத்துறையின் தற்போதைய துரதிஷ்டமான நிலைமையிலிருந்து அதனை மீட்பதற்கான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியினை ஊக்குவிப்பதற்கான தேவையொன்று காணப்படுகிறது.

### 3.3 ஏற்றுமதிப் பயிர்கள்

#### தேயிலை

2003 ஆம் ஆண்டில் தேயிலை உற்பத்தி 2002 ஆம் ஆண்டின் 310 மில்லியன் கிலோகிறாம்கள் கொண்ட அதிஉச்ச உற்பத்தியிலிருந்து 2 சதவீதத்தினால் 303 மில்லியன் கிலோகிறாம்களுக்கு வீழ்ச்சியடைந்தது. வெள்ளப்பெருக்கும் மண்சரிவும் தாழ்நில மட்ட தேயிலை உற்பத்தியை பாதித்தவேளையில் 2003 திசெம்பரில் நிலவிய வரட்சிநிலை அனைத்து மூன்று மட்டங்களிலான நிலப் பிரதேசங்களின் உற்பத்திகளைப் பாதித்தது. உயர் நிலத் தேயிலை உற்பத்தியானது 82 மில்லியன் கிலோகிராம்களுக்கு 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் மத்திய நிலத் தேயிலை உற்பத்தி சிறிதளவால் வீழ்ச்சியடைந்து மொத்த உற்பத்தியில் 55 சதவீதத்திற்கு மேலானவற்றிற்கு வகைகூறிய தாழ்நிலத் தேயிலையானது 168 மில்லியன் கிலோகிறாம்களுக்கு 1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. வெட்டி, கிழித்து, சுருட்டப்பட்ட தேயிலை உற்பத்தி 2002 உடன் ஒப்பிடுகையில் 17.6 மில்லியன் கிலோகிறாம்களுக்கு 1 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. 2003 இல் கலத்தல் மற்றும் மீள்ஏற்றுமதிக்கான தேயிலை இறக்குமதிகள் 2.5 மில்லியன் கிலோகிறாம்களிலிருந்து 4.5 மில்லியன் கிலோகிறாம்களுக்கு அதிகரித்தன.

முன்னைய ஆண்டைப் போலவே சிறுஉடைமையாளர்துறை தேயிலை கைத்தொழிலில் தொடர்ந்தும் ஒரு முக்கியதொரு இடத்தை வகித்து 2003 இன் தேசிய உற்பத்தியில் 62 சதவீதத்திற்கு பங்களிப்புச் செய்தது. ஏறக்குறைய 82 சதவீதமான சிறுவுடமை யாளர்கள் தாழ்நிலப் பகுதிகளிலேயே செறிந்து காணப்படுகின்றனர். சிறு உடைமையாளர் துறையின் சராசரி விளைச்சல் 2003 இல் வெள்ளப்பெருக்கின் மோசமான தாக்கத்தின் காரணமாக எக்டேயருக்கு 2,267 கிலோகிறாம்களுக்கு 1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. 2003 இல் தோட்டத்துறையிலான மதிப்பிடப்பட்ட சராசரி விளைச்சல் எக்டேயருக்கு 1,399 கிலோகிறாம்களாக இருந்தவேளையில், 2003 இல் மதிப்பிடப்பட்ட தேசிய சராசரி விளைச்சல் எக்டேயருக்கு 1,834 கிலோகிறாம்களாக விளங்கியது.[1]

1. பெருந்தோட்டத்துறையின் சராசரி விளைச்சல் பெருந்தோட்டக் கம்பனிகளால் வழங்கப்பட்ட பயிரிடப்பட்ட பரப்பை அடிப்படையாகக் கொண்டிருந்த வேளையில் சிறு உடைமையாளின் விளைச்சல் தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி அதிகாரசபையால் வழங்கப்பட்டது.

**அட்டவணை 3.2**
**தேயிலைத் துறை மீதான புள்ளி விபரங்கள்**

| விடயம் | அலகு | 2001 | 2002(அ) | 2003(ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி | மில்.கி.கிறாம் | 295 | 310 | 303 |
| உயர் நிலம் | மில்.கி.கிறாம் | 75 | 87 | 82 |
| மத்திய நிலம் | மில்.கி.கிறாம் | 54 | 54 | 54 |
| தாழ் நிலம் | மில்.கி.கிறாம் | 166 | 169 | 168 |
| 2. நிலப்பரப்பு | | | | |
| மொத்த நிலப்பரப்பு (இ) | '000எக்டேயர் | 180 | 189 | 188 |
| நாட்டப்பட்டநிலப்பரப்பு | '000எக்டேயர் | 165 | 165 | 165 |
| 3. வளமாக்கிப் பாவனை(ஈ) | '000மெ.தொன் | 167 | 185 | 167 |
| 4. மீள் நடுகை | எக்டேயர் | 1,018 | 1,029 | 936 |
| 5. புதிய பயிரிடுகை | எக்டேயர் | 402 | 562 | 642 |
| 6. விலைகள் | | | | |
| கொழும்பு ஏலம் | ரூபா/கி.கி. | 143.96 | 149.30 | 149.05 |
| ஏற்றுமதிகள்(க.ஏ.பெ.) | ரூபா/கி.கி. | 208.89 | 216.26 | 221.01 |
| 7. உற்பத்திச் செலவு (உ) | ரூபா/கி.கி. | 121.57 | 124.06 | 135.58 |
| 8. ஏற்றுமதிகள் | மில்.கி.கி. | 295 | 292 | 298 |
| 9. ஏற்றுமதி வருவாய்கள் | ரூ.மில் | 61,602 | 63,105 | 65,936 |
| | அ.டொ.மில். | 690 | 660 | 683 |
| 10. மொத்த உள்நாட்டு உற்பத்தியின்சதவீதமாகக் கூட்டப்பட்டபெறுமதி(ஊ) | | 2.3 | 2.4 | 2.3 |

மூலங்கள்: இலங்கைத் தேயிலைச் சபை, தேசிய வளமாக்கிச் செயலகம், தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்திச்சபை, பெருந்தோட்டக் கம்பனிகள், இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானவை
(இ) நிலப்பரப்பானது தேயிலை ஆணையாளர் பிரிவினால் 1999இல் மேற்கொள்ளப்பட்ட பெருந்தோட்டப் பகுதிகளுக்கான அளவீட்டின் அடிப்படையில் திருத்தியமைக்கப்பட்டது. (கைவிடப்பட்ட தேயிலை நிலங்கள் உள்ளடங்காது)
(ஈ) பெருந்தோட்டக் கம்பனிகள் மற்றும் சிறுதேயிலை உடைமையாளர் அபிவிருத்திச்சபை என்பன வழங்கும் புள்ளி விபர அடிப்படையில்
(உ) கொழுந்துத் தேயிலையை வழங்குபவர்களின் இலாப அளவையும் உள்ளடக்குகின்றது.
(ஊ) பயிரிடலிலும் பதனிடலிலும் மட்டும்.

இவ்வாண்டுக் காலத்தில் தேயிலை உற்பத்திச் செலவு வளமாக்கி, விவாசய இரசாயனங்கள், எரிபொருளும் மின்வலுவும் போன்ற உள்ளீட்டுப் பொருட்களின் விலைகள் அதிகரித்ததன் காரணமாக 9.3 சதவீதத்தினால் கிலோகிறாம் ஒன்றிற்கு ரூ.135.58 இற்கு அதிகரித்துக் காணப்பட்டது. 2002 யூலையில் நடைமுறைப்படுத்தப்பட்ட கூலி அதிகரிப்புக்களும் உற்பத்திச் செலவு அதிகரிப்பிற்கு பங்களிப்புச் செய்தன.

**வரைபடம் 3.1**
**விலை, உற்பத்திச் செலவுச் சுட்டெண்கள் - தேயிலை**
**(1990 = 100)**




உற்பத்தியி லேற்பட்ட வீழ்ச்சிக்கு சமனான கொழும்பு ஏலங்களில் வர்த்தகம் செய்யப்பட்ட தேயிலையின் அளவும் 2003 இல் 304 மில்லியன் கிலோகிறாம்களுக்கு 2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. ரூபாய் நியதிகளில் கொழும்பு ஏலங்களில் ஆண்டுச் சராசரி விலை 2003 இல் கிலோ கிறாம் ஒன்றிற்கு 149.05 ஆக சிறிதளவால் வீழ்ச்சியடைந்தவேளையில், ஐ.அ.டொலர் நியதிகளில் அது கிலோகிறாம் ஒன்றிற்கு ஐ.அ.டொலர் 1.54 இற்கு 1 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. ஈராக் யுத்தத்தினால் தோற்றுவிக்கப்பட்ட நிச்சயமற்ற தன்மைகளின் விளைவாக ஆண்டின் முதலரைப்பகுதியில் தேயிலை விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியைப் பிரதிபலிக்கின்றது. மேலும் ஏனைய அனைத்து முக்கிய உற்பத்தி நாடுகளினது உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக 2003 இல் உலகத் தேயிலை விலைகள் கவர்ச்சிகரமானதாக இருக்கவில்லை. குறைந்த விலைகளினதும், உயர்வான உற்பத்திச் செலவுகளினதும் விளைவாக பல பெருந்தோட்ட கம்பனிகள் நிதிப்பிரச்சினைகளை எதிர்கொண்டு மூலதன முதலீட்டின் அபிவிருத்தியையும் தோட்டங்களின் மீள்நடுகை செய்தமையையும் குறைக்க வழிவகுத்தன. நிதியிடுவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் பெருந்தோட்ட அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கிடைக்கத்தக்க நிதிகளில் ஏற்பட்ட தாமதம் பெருந்தோட்டக் கம்பனிகளின் கீழான சில தேயிலைத் தோட்டங்களை அபிவிருத்தி செய்வதனைப் பாதித்தன.

இலங்கையின் தேயிலை ஏற்றுமதிகள் 2002 இலிருந்து முன்கொண்டு வரப்பட்ட இருப்புக்கள் குறைவடைந்தமையின் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2003 இல் 298 மில்லியன் கிலோ கிறாம்களுக்கு 2 சதவீதத்தினால் அதிகரித்தன. ரூபா நியதிகளில், தேயிலையிலிருந்தான மொத்த ஏற்றுமதி வருவாய்கள் ரூ.66 பில்லியனாக (ஐ.அ.டொலர் 683 மில்லியன்) விளங்கி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 4.5 சதவீதமான அதிகரிப்பினைக் காட்டின. தொகை வடிவிலான தேயிலைப் ஏற்றுமதிகள் தேயிலைப் பொதிகள், தேயிலைப் பைகள், உடன் தேயிலை போன்ற பெறுமதி சேர்க்கப்பட்ட தேயிலையிலான அதிகரிப்பின் காரணமாக 64 சதவீதத்திலிருந்து 59 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தன. இது 2003 இல் தேயிலையின் சராசரி ஏற்றுமதி வீதத் திற்கு வீழ்ச்சியடைந்தன. இது 2003 இல் தேயிலையின் சராசரி ஏற்றுமதி விலையில் அதிகரிப்பினை விளைவித்தது.

இலங்கைத் தேயிலைச்சபை "குடிப்பதற்குத் தயாரான" என்ற தேயிலையின் அபிவிருத்தியை ஊக்குவிக்கும் முகமாக வட்டி உதவுதொகை வாயிலாக நிதி உதவித்திட்டம் ஒன்றினை ஆரம்பித்துள்ளது. இத்திட்டத்தின் கீழ் குடிப்பதற்கு தயாரான தேயிலையை

தயாரிப்பதற்கான அத்தியாவசியமான பொறித் தொகுதியை கொள்வனவு செய்வதற்கு வங்கிகளிலிருந்து அல்லது ஒப்புதலளிக்கப்பட்ட கடன்வழங்கும் நிறுவனங் களிலிருந்து பெறப்படும் கடன்கள் மீதான வட்டிச்செலவின் 50 சதவீதத்தினை தேயிலைச்சபை ஐந்து ஆண்டு காலத்திற்கு உதவித்தொகையாக வழங்கும். ஆகக்கூடுதலான கடன் தொகை செயற்றிட்டமொன் றிற்கு ரூ.20 மில்லியனாக இருக்கும்.

தேயிலை சிறு உடைமையாளர்கள் அபிவிருத்தி அதிகாரசபை தேயிலை சிறுஉடைமையாளருக்கு அவசியமான மதியுரை மற்றும் விரிவாக்கல் பணிகளை வழங்குவதுடன் மீள்நடுகைகள் சிறப்பு ஊக்குவிப்புத் திட்டத்துடன் சேர்த்து தேயிலை நடுகைக்கான உதவித்தொகைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தி தொடர்ந்தும் ஆதரவளித்தது. 2003 தேயிலை சிறு உடைமையாளர்களுக்கு தேயிலை மீள்நடுகை, புதியநடுகை மற்றும் இடையிடையே நடுதல் என்பவற்றிற்காக பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த உதவுதொகை ரூ.157 மில்லியனாக விளங்கியது. மேலும் தேயிலை சிறு உடைமையாளர் அபிவிருத்தி அதிகாரசபை சிறு உடைமையாளர்களின் நன்மைக்காக கொடுகடன் வசதிகளின் கீழ் வளமாக்கி பங்கீட்டுத் திட்டத்தினையும் தொடர்ந்து மேற்கொண்டது.

## இறப்பர்

தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாகவும் இறப்பர் உற்பத்தி 2003 இல் 92 பில்லியன் கிலோ கிறாம்களுக்கு சிறிதளவால் (1.6 சதவீதம்) அதிகரித்தது. இவ்வாண்டின் கவர்ச்சிகரமான விலைகள் இறப்பர் உற்பத்தியை உயர்த்துவதற்காக பால் எடுத்தலைத் தீவிர மாக அதிகரிப்பதற்கு ஊக்கமளித்தது. எனினும் 2003 இல் பெரும் எண்ணிக்கையான நாட்கள் மழை பெய்த காரணத்தினால் உற்பத்தி அதிகரிப்புக்கள் உள்ளார்ந்த வளத்தைக் காட்டிலும் வீழ்ச்சியுற்றன.

தட்டை இறப்பர் உற்பத்தியிலான அதிகரித்த இலாபத்தன்மையின் பிரதிபலிப்பாக கிறேப் இறப் பரிலிருந்து தட்டை இறப்பர் தயாரிப்பதற்கு நகர்வொன்று காணப்பட்டது. இதனால் தட்டை இறப்பர் வெளியீடு 2002 இல் பதிவு செய்யப்பட்ட 47 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 17 சதவீதத்தினால் அதிகரித்து மொத்த வெளியீட்டின் 54 சதவீதத்திற்கு வகைகூறியது. கிறேப் இறப்பர் வெளியீடு 2002 இன் 29 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 14 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து மொத்த வெளியீட்டில் 24 சதவீதத்திற்கு வகைகூறியது.

2002 ஏப்பிரல் இல் தொடங்கிய கொழும்பு ஏல விலைகளிலான மேல்நோகக்கிய போக்கு 2003 இலும் தொடர்ந்து இறப்பரின் அனைத்து ஏல விலைகளினதும் கொழும்பு ஏல விலைகள் முன்னெப்பொழுதுமிராத அதியுயர் ரூபா விலைகளுக்கு அதிகரித்தன. கொழும்பு

**அட்டவணை 3.3**
**இறப்பர்த்துறையின் மீதான புள்ளி விபரங்கள்**

| விடயம் | அலகு | 2001 | 2002(அ) | 2003(ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி | மில்.கி.கிறாம் | 86 | 91 | 92 |
| 2. பரப்பளவு (இ) | | | | |
| பயிர்செய்கைக்குட்பட்ட | '000 எக்டேயர் | 157 | 157 | 129 |
| பால் எடுக்கும்(இ) | '000 எக்டேயர் | 132 | 125 | 101 |
| 3. விளைச்சல் | கி.கி./எக்டேயர் | 653 | 724 | 911 |
| 4. வளமாக்கிப் பயன்பாடு | '000 மெ.தொன் | 9 | 7 | 8 |
| 5. மீள் நடுகை (ஈ) | எக்டேயர் | 557 | 712 | 564 |
| 6. புதிய பயிரிடுகை (ஈ) | எக்டேயர் | 141 | 141 | 450 |
| 7. விலைகள் | | | | |
| ஏற்றுமதிகள் (க.ஏ.பெ.) | ரூபா/கி.கி. | 66.35 | 69.53 | 105.25 |
| கொழும்பு ஆர்.எஸ்.எஸ்.1 | ரூபா/கி.கி. | 54.70 | 68.76 | 102.50 |
| 8. உற்பத்திச் செலவு | ரூபா/கி.கி. | 48.00 | 54.00 | 63.30 |
| 9. ஏற்றுமதிகள் | மில்.கி.கிறாம் | 32 | 37 | 35 |
| 10. உள்நாட்டு நுகர்வு | மில்.கி.கிறாம் | 54.4 | 54.4 | 56.8 |
| 11. ஏற்றுமதி வருவாய்கள் | ரூ.மில் | 2,129 | 2,552 | 3,718 |
| | அ.டொ.மில். | 24 | 27 | 39 |
| 12. மொத்த உள்நாட்டு உற்பத்தியின்சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி(ஊ) | | 0.4 | 0.5 | 0.5 |

மூலங்கள்: இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம், தேசிய வளமாக்கிச் செயலகம், இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) 2002இல் குடிமதிப்புப் புள்ளி விபரத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட வேளாண்மைப் பயிர்கள் அளவீட்டின் அடிப்படையில் இறப்பர் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு திருத்தப்பட்டது.
(ஈ) இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தின் பயிர்ச் செய்கை உதவித் திட்டத்தின் கீழான நிலப்பரப்பு.
(உ) 2003 இறப்பர் அபிவிருத்தித் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்ட அளவீட்டின் அடிப்படையில் 2002இன் உற்பத்திச் செலவு திருத்தியமைக்கப்பட்டது.
(ஊ) பயிரிடலும் பதனிடலும் மட்டும்.

ஏலத்தில் ஆர்.எஸ்.எஸ். இன் அனைத்து தரங்களினதும் சராசரி ஏல விலை ரூபா நியதிகளில் கிட்டத்தட்ட 50 சதவீதத்தினால் அதிகரித்து லேட்டெக்ஸ், கிறேப் இறப் பரின் ஆண்டுச்சராசரி விலைகள் கிட்டத்தட்ட 60 சதவீதமளவிற்கு அதிகரித்தன.

இறப்பரின் தேசிய சராசரி விளைச்சல் எக்டேயருக்கு 911 கிலோகிறாம்களுக்கு 26 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும் இந்த விளைச்சல் இறப்பர் ஆராய்ச்சி நிறுவனத்தினால் மதிப்பிடப்பட்ட எக்டேய ரொன்றுக்கான 1,500, 2,000 கிலோகிறாம் கொண்ட

வரைபடம் 3.2
விலை, உற்பத்திச் செலவுச் சுட்டெண்கள் - இறப்பர்
(1990 = 100)



உள்ளார்ந்த விளைச்சலை விட பெருமளவு குறைந்து காணப்பட்டதுடன் முக்கிய போட்டி நாடுகளான தாய்லாந்து (1,531 கி.கி/எக்டேயர்) மற்றும் மலேசியாவின் (1,047 கி.கி/ எக்டேயர்) மட்டங்களையும் விட மிகவும் முக்கியமாக பரிந்துரைக்கப்பட்ட வளமாக்கி மட்டங்களை பிரயோகிக்காமை, மழைக்காப்புக்களை சரியான முறையில் பயன்படுத்தாமை, உயர் விளைச்சல் தரும் புதிய பதியங்களை பயன்படுத்தாமை, முறையான பயிர்களிடையேயான நடுகை நடைமுறைகளை பின் பற்றாமை, தகுதி வாய்ந்த தேர்ச்சிபெற்ற பால் எடுப்பவர்க்கான பற்றாக்குறை என்பன பொறுப்பா யமைந்துள்ள மேலே குறிப்பிட்ட நடைமுறைகளுள் பெரும்பாலானவை இத்துறையின் உற்பத்தித் திறனுடனும் வருமானத்துடனும் நேரடியாக தொடர்புபட்டுள்ளன. பால் எடுப்பவர்களுக்கான பற்றாக்குறை இக்கைத்தொழி லில் கடுமையான பிரச்சினையை உருவாக்கியது. சார்புரீதியில் குறைவான கூலி மற்றும் இந்த தொழிலுடன் இணைந்துள்ள குறைந்த கௌரவம் என்பன காரணமாக இளம் சந்ததியினர் பாலெடுத்தல் தேர்ச்சி பெற்ற தொழிலாக இருந்தபோதும் பால் எடுப்பவராக தொழிலில் சேரத் தயக்கம் காட்டுகின்றனர்.

இறப்பர் புதிய நடுகை மும்மடங்கு அதிகரிப்பினை பதிவுசெய்து (219 சதவீதத்தால்) 2003 இல் 450 எக்டேயர்களாக விளங்கியது. தற்பொழுது நிலவும் உயர் விலைகள் புதுநடுகையினை ஊக்குவித்ததெனினும் முற்றிய மரங்களை அகற்றுவதனை ஊக்கம்குன்றச் செய்தன. இதன் விளைவாக இவ்வாண்டில் மீள்நடுகை 564 எக்டேயருக்கு 20 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. 2003 இல் இறப்பர் அபிவிருத்தித் திணைக்களம் மீள்நடுகைக்கும் புதுநடுகைக்கும் என முறையே ரூ.62 மில்லியனையும், ரூ.28 மில்லியனையும் பகிர்ந்தளித்தது. மீள்நடுகை உதவித்தொகை மீள்நடுகை செலவில் சிறுபகுதியை மட்டுமே உள்ளடக்குவதனால் பெருந் தோட்டக் கைத்தொழில் அமைச்சு உதவித்தொகையை அதிகரிப்பதற்கு திட்டமிடுகிறது.

கைத்தொழில் துறையின் உள்நாட்டு இறப்பரின் நுகர்வு 57 மில்லியன் கிலோகிறாம்களுக்கு 4.4 சதவீதத்தால் அதிகரித்து 2003 இன் தேசிய இறப்பர் வெளியீட்டில் 62 சதவீதத்திற்கு வகைகூறியது. 2003 இல் இறக்குமதி செய்யப்பட்ட இறப்பர் தொகை 9 மில்லியன் கிலோகிறாம்களுக்கு 85 சதவீதத்தால் அதிகரித்தது. இடைநிலைப் பொருளாக ஏற்றுமதி செய்யப்பட்ட இறப்பரின் அளவு அதிகரித்த உள்நாட்டுக் கேள்வியின் காரணமாக 35 மில்லியன் கிலோகிறாம்களுக்கு 4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

## தெங்கு

2003 இல் தெங்கு உற்பத்தி 7 சதவீதத்தால் 2,562 மில்லியன் காய்களுக்கு வளர்ச்சியடைந்து 2002 இல் நிலவிய சாதகமான வானிலையின் காலம் கடந்த தாக்கத்தின் விளைவாக பெரும்பாலும் ஆண்டின் இரண்டாவது அரைப்பகுதியில் மேம்பாடு காணப்பட்டது.

வரைபடம் 3.3
விலை, உற்பத்திச் செலவுச் சுட்டெண்கள் - தெங்கு
(1990 = 100)




**அட்டவணை 3.4**
**தெங்குத்துறையின் புள்ளி விபரங்கள்**

| விடயம் | அலகு | 2001 | 2002(அ) | 2003(ஆ) |
|---|---|---|---|---|
| 1. உற்பத்தி (இ) | மில்.காய்கள் | 2,769 | 2,392 | 2,562 |
| தேங்காய்த்துருவல் | மில்.காய்கள்(ஈ) | 408 | 246 | 369 |
| தேங்காய் எண்ணெய் | மில்.காய்கள்(ஈ) | 566 | 265 | 110 |
| உலர்த்திய தேங்காய் (உ) | மில்.காய்கள்(ஈ) | 81 | 71 | 102 |
| உடன்காய் ஏற்றுமதிகள் | மில்.காய்கள் | 28 | 24 | 34 |
| உள்நாட்டுத் தேங்காய்நுகர்வு(ஊ) | மில்.காய்கள் | 1,786 | 1,815 | 1,834 |
| தெங்கு களிம்பும் பால்மாவும் | மில்.காய்கள் | 30 | 32 | 63 |
| 2. மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர் | 439 | 439 | 439 |
| 3. மீளப் பயிரிடல்/கீழ்ப் பயிரிடல் (எ) | எக்டேயர் | 867 | 953 | 1,226 |
| 4. புதிய பயிரிடல் (எ) | எக்டேயர் | 993 | 904 | 1,098 |
| 5. வளமாக்கிப் பாவனை | '000மெ.தொன் | 30 | 38 | 39 |
| 6. உற்பத்திச் செலவு | காய்க்கு ரூபா | 3.65 | 3.85 | 4.10 |
| 7. உடன்காயொன்றின் சில்லறை விலை | காய்க்கு ரூபா | 10.50 | 14.87 | 13.40 |
| 8. சராசரி ஏற்றுமதி விலை (க.ஏ.பெ.)(எ) | காய்க்கு ரூபா | 7.05 | 12.06 | 9.98 |
| 9. ஏற்றுமதி வருவாய் | ரூ.மில். | 7,348 | 8,009 | 8,926 |
| | ஐ.அ.டொ.மில். | 82 | 84 | 93 |
| உள்வீட்டு உற்பத்திகள் (ஏ) | ரூ.மில். | 3,639 | 3,957 | 4,601 |
| | ஐ.டொ.மில். | 41 | 41 | 48 |
| ஏனைய உற்பத்திகள் (ஐ) | ரூ.மில். | 3,709 | 4,052 | 4,325 |
| | ஐ.டொ.மில். | 42 | 42 | 45 |
| 10. மொ.உ.உ.இன் சதவீதமாகக் கூட்டப்பட்ட பெறுமதி (ஐ) | | 2.0 | 2.0 | 2.0 |

மூலங்கள்: தெங்குப் பயிர்ச்செய்கைச் சபை,
தெங்கு அபிவிருத்தி மேலாண்மைச் சபை,
தேசிய வளமாக்கிச் செயலகம்,
இலங்கை மத்திய வங்கி.

(அ) திருத்தப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) மதிப்பீடு இருப்புக்களில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு சீராக்கஞ் செய்யப்படுவதன் காரணமாக பகுப்பாய்வின் கூட்டுத்தொகை மொத்தத்துடன் ஒத்திருக்க மாட்டாது.)
(ஈ) தெங்காய்க்குச் சமமான
1 மெற்.தொன் தேங்காய்த்துருவல் = 8,000 காய்கள்.
1 மெற்.தொன் எண்ணெய் = 8,800 காய்கள்.
1 மெற்.தொன் உலர்த்திய தேங்காய் = 5,775 காய்கள்.
1 மெற்.தொன் தேங்காய்க் களிம்பும் பால்மாவும் = 8,000 காய்கள்.
(உ) தேறிய ஏற்றுமதிகள் மட்டும்.
(ஊ) தலைக்குரிய வீட்டு நுகர்வு ஆண்டுக்கு 94.8 காய்கள் என மதிப்பிடப்பட்டது. கைத்தொழிலுக்கு பயன்படுத்தப்பட்டவை தவிர.
(எ) தெங்குப் பயிர்ச்செய்கைச் சபையின் பயிர்ச்செய்கை உதவித் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்பட்ட நிலப்பரப்பு.
(ஏ) மூன்று முக்கிய தெங்கு உள்ளீட்டு உற்பத்திகள் மட்டும்.
(ஐ) பயிர் செய்தலிலும் பதனிடலிலும் மட்டும்.

மேலும் 2002 இல் நிலவிய கவர்ச்சிகரமான தெங்கு விலைகளின் காரணமாக வளமாக்கி பாவனை ஊக்குவிக்கப்பட்டது.

தேங்காய்த்துருவல் உற்பத்திக்கு காய் சமமான 369 மில்லியன் காய்களுக்கு 50 சதவீதத்தால் அதிகரித்து உயர்வடைந்த விலைகளின் தன்மைகளைப் பிரதிபலித்தது. எனினும், தேங்காய் எண்ணெய் உற்பத்திக்குச் சமமான காய் 110 மில்லியன் காய்களுக்கு 58 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்ததுடன் இது கடந்த பத்து ஆண்டுக் காலத்தில் பதிவு செய்யப்பட்ட ஆகக் குறைந்த மட்டமாகவும் விளங்கியது. 2002 செத்தெம்பரில் மேலதிகக் கட்டணம் நீக்கப்பட்டதனால் பின்னர் இறக்குமதி செய்யப்பட்ட சமையல் எண்ணெய்யுடன் ஆலைச் சொந்தக்காரர்கள் போட்டியிட முடியாமையினால் எண்ணெய் உற்பத்தி வீழ்ச்சியடைந்து ஏனைய உள்ளீட்டு உற்பத்திகளின் ஏற்றுமதிகள் இவ்வாண்டில் கணிசமானளவு அதிகரித்தன. உலர்த்திய தேங்காய் ஏற்றுமதிகள் 44 சதவீதத்தால் அதிகரித்தவேளையில் இவ்வாண்டில் உடன் காய்களின் ஏற்றுமதிகளும் 42 சதவீதத்தால் அதிகரித்தன. தெங்கு களிம்பு, தேங்காய்ப் பால் மற்றும் உலர்ந்த பால்மா என்பவற்றின் உற்பத்தி பெரும்பாலும் இருமடங்கால் (93 சதவீத அதிகரிப்பு) 63 மில்லியன் காய்களுக்கு அதிகரித்தது.

தேங்காய்த்துருவலின் சராசரி உள்நாட்டு விலை கிலோகிராமொன்றிற்கு ரூ.71.36 இற்கு 20 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. இதேவேளை தேங்காய்த்துருவலின் சராசரி ஏற்றுமதி விலை ஐ.அ.டொலர் நியதிகளில் 2002 இனை விட 22 சதவீதம் குறைவடைந்து காணப்பட்டது. உடன் காய்களின் சராசரி உள்நாட்டு சில்லறை விலைகள் 2003 இல் காயொன்றிற்கு ரூ.13.40 இற்கு 10 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்து அதிகரித்த வெளியீட்டின் தாக்கத்தினை பிரதிபலித்தன.

**அட்டவணை 3.5**

**ஏனைய ஏற்றுமதிப் பயிர்களின் உற்பத்தி**

மெற்றிக் தொன்கள்

| பயிர் | 2001 | 2002(அ) | 2003(ஆ) |
|---|---|---|---|
| கோப்பி | 2,350 | 2,360 | 3,090 |
| கொக்கோ | 1,275 | 1,100 | 1,100 |
| கறுவா | 13,600 | 13,000 | 14,015 |
| மிளகு | 7,650 | 12,600 | 12,660 |
| கராம்பு | 2,700 | 4,100 | 2,360 |
| ஏலம் | 60 | 60 | 64 |
| சாதிக்காயும் சாதிப்பத்திரியும் | 1,100 | 1,600 | 1,740 |
| முந்திரிகை | 1,239 | 1,292 | 1,645 |

மூலங்கள்: இலங்கை வேளாண்மை ஏற்றுமதித் திணைக்களம், இலங்கை மர முந்திரிகைக் கூட்டுத்தாபனம்.

(அ) திருத்தியமைக்கப்பட்டவை.

(ஆ) தற்காலிகமானவை.

**ஏனைய ஏற்றுமதிப் பயிர்கள்**

வாசனைத் திரவியங்கள் மற்றும் ஏனைய வேளாண்மைப் பண்டங்களான தயாரிக்கப்படாத புகையிலை, பாக்கு, மரமுந்திரிப்பருப்பு, அத்தியாவசியமான எண்ணெய் வகைகள், மலர்ச்செடிகள் மற்றும் அலங்கார மலர்கள் என்பனவற்றை உள்ளடக்கிய ஏனைய ஏற்றுமதிப்பயிர்கள் துறை 2003 இல் கலப்பு செயலாற்றத்தினை பதிவு செய்தது. இத்துறைகளிலிருந்தான வருமானம் (ரூபா நியதிகளில்) பொதுவாக 14.5 பில்லியனுக்கு மேலாக 14 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தமைக்கு பல பண்டங்களுக்கு பெறப்பட்ட குறைந்த ஏற்றுமதி விலைகளும் அத்துடன் கராம்பு, தயாரிக்கப்படாத புகையிலை, மிளகு, பாக்கு, கொக்கோ விதைகள் மற்றும் மரமுந்திரிகைப் பருப்பு போன்ற முக்கிய பண்டங்களின் ஏற்றுமதி அளவுகளில் ஏற்பட்ட வீழ்ச்சியும் காரணங்களாக விளங்கின. எனினும் முன்னைய ஆண்டினைப் போன்றே இத்துறைகளிலிருந்தான வருவாய்கள் இறப்பர் மற்றும் தெங்குப் பொருட்களின் மொத்த ஏற்றுமதி வருவாய்களை விட விஞ்சிக் காணப்பட்டன.

கறுவா இத்துறையின் அதிமுக்கியமான பயிராகும். கறுவா பயிர்ச்செய்கையின் கீழான பரப்பளவு ஏறத்தாழ 25,300 எக்டேயர்கள் என மதிப்பிடப்பட்டது. அதியுயர்ந்த கறுவா உற்பத்தியாளராகவும், ஏற்றுமதியாளராகவும் இலங்கை விளங்கி உலக வெளியீட்டில் கிட்டத்தட்ட மூன்றிலிரண்டு பங்குக்கும் வகைகூறியது. ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களத்தின் மதிப்பீடுகளின்படி 2003 இல் கறுவா உற்பத்தி 8 சதவீதத்தினால் அதிகரித்தது. ஆனால் பண்ணை அடிமட்ட விலைகளும், ஏற்றுமதி விலைகளும் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் சிறிதளவால் வீழ்ச்சியடைந்தன. பதனிடப்படாத கறுவாவிலிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ரூ.4.3 பில்லியனாக விளங்கியவேளையில் கறுவாப்பட்டை எண்ணெய் மற்றும் இலை எண்ணெய் என்பவற்றிலிருந்தான வருவாய்கள் ரூ.224 மில்லியனாக விளங்கின. அண்மைய ஆண்டுகளில் கறுவா ஏற்றுமதிகளிலிருந்து பெறப்பட்ட வருவாய்களில் உறுதியான அதிகரிப்பொன்று காணப்பட்டதுடன் 1998 ஆம் ஆண்டிலிருந்து தேயிலை, தெங்கிற்கு அடுத்ததாக மூன்றாவது பாரிய வேளாண்மைப் பயிராக விளங்குகிறது. பதனிடப்படாத உற்பத்தியாக கறுவாவை ஏற்றுமதி செய்வதற்குப் பதிலாக கறுவாவிலிருந்தான பெறுமதி சேர்க்கப்பட்ட ஏற்றுமதிகளை அதிகரிப்பதற்கான கணிசமான உள்ளார்ந்த வளத்தை இலங்கை கொண்டுள்ளது.

தற்காலிக மதிப்பீடுகளின்படி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மிளகு உற்பத்தியில் எதுவித மாற்றமுமில்லை. எனினும் ஏற்றுமதி அளவு 7,740 மெற்றிக் தொன்களுக்கு 2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. ஏற்றுமதி விலைகளும் முன்னைய ஆண்டைவிட குறை

வடைந்து காணப்பட்டதுடன் இது ஏற்றுமதி வருவாயில் ரூ.1.5 பில்லியனிலிருந்து ரூ.1.2 பில்லியனுக்கு குறை வடையச் செய்தது.

2003 இல் கராம்பு உற்பத்தி 2,360 மெற்றிக் தொன்களுக்கு ஏறத்தாழ 42 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. உற்பத்தியிலேற்பட்ட வீழ்ச்சிக்கு இரத்தினபுரி, களுத்துறை, மாத்தறை, காலி மாவட்டங்களில் மே மாதம் நிலவிய வானிலை நிலைமை காரணமாகவிருந்தது. உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சி குறை வடைந்த ஏற்றுமதி விலைகளுடன் இணைந்து கராம்பு ஏற்றுமதி வருவாய்களில் கணிசமான வீழ்ச்சியை விளைவித்தது. கராம்பு ஏற்றுமதிகள் 2.5 மில்லியன் கிலோகிறாம்களுக்கு 38 சதவீதத்தால் வீழ்ச்சி யடைந்ததுடன் ஏற்றுமதி வருவாயின் 2002 இன் ரூ.2.7 பில்லியனிலிருந்து 2003 இல் ரூ.575 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன.

2003 இல் மரமுந்திரிகைப் பருப்பு உற்பத்தி 29 சதவீதத்தால் அதிகரித்தது. இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத்தாபனத்தினால் பயிர்ச்செய்கை, சந்தைப்படுத்தல் பதனிடல் என்பவற்றிற்கு வழங்கப்பட்ட உதவிகளின் விளைவாக அண்மைய ஆண்டுகளில் மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கையின் கீழான பரப்பளவு உறுதியாக அதிகரித்தது. ஆகையால் 2003 இல் மரமுந்திரிகைச் செய்கையில் கீழான பரப்பளவு 35,646 எக்டேயர்களாக விளங்கியது. இலங்கை மரமுந்திரிகைக் கூட்டுத் தாபனத்தினால் ஆரம்பிக்கப்பட்ட சேதன மரமுந்திரிகைப் பயிர்ச்செய்கைத் திட்டம் 2003 இலும் தொடர்ந்தது. பிர தேச மட்டத்தில் வேளாண்மையாளருக்கு அதி சிறந்த கன்றுகளை வழங்கும் முகமாக இலுவனகுளம் விதைப்பண்ணைக்கு மேலதிகமாக அநுராதபுரம் மாவட்டத்தில் விலச்சிய என்னுமிடத்தில் 2003 இல் விதைப் பண்ணையொன்று நிறுவப்பட்டது. ஒன்றிணைந்த நடுகை நிகழ்ச்சித்திட்டங்கள், விரிவாக்கப் பணிகள் ஆராய்ச்சி மற்றும் சந்தைப்படுத்தல் நிகழ்ச்சித் திட்டங்கள் என்ப வற்றின் விளைவாக மரமுந்திரிகைத் தொழில் துறை எதிர்காலத்தில் மேலும் அபிவிருத்தியடையுமென எதிர்பார்க்கப்படுகிறது.

மலர்ச்செடிகள் மற்றும் அலங்கார மலர்கள் துறை யும் இவ்வாண்டின் ஏற்றுமதி வருவாய்களுக்கு குறிப் பிடத்தக்க பங்களிப்பை செய்துள்ளது. 2003 இல் மலர்ச்செடிகள் வேர்களுடனான செடிகள் மற்றும் அலங்கார மலர்கள் என்பவற்றி லிருந்தான ஏற்றுமதி வருவாய்கள் ரூ.925 மில்லியனுக்கு 17 சதவீதத்தால் உயர்வடைந்தன. இத்துறை வேளாண்மைத் திணைக்களம் மற்றும் ஏற்றுமதி அபிவிருத்திச்சபை என்பவற்றினால் வழங்கப்பட்ட உதவியுடன் தனது நடவடிக்கைகளை விரிவுபடுத்தியது. வேளாண்மைத் திணைக்களம் தொழில்நுட்ப உதவிகளை வழங்குதல், பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துதல், தேசிய தாவரவியல் பூங்காவினூடாக பலவகையான செடிகளை வழங்குதல் என்பவற்றின் மூலம் மலர்ச்செய்கைக்கு தொடர்ந்தும் உதவிகளை வழங்கி வருகின்றது. ஏற்றுமதி அபிவிருத்திச்சபையும் மலர்ச்செய்கைத் துறையை அபிவிருத்தி செய்வதற்காக சிறப்பாக ஏற்றுமதி யாளர்களுக்கும் ஏற்றுமதிக்கான சாத்தியத்தினை கொண்டுள்ளவர்களுக்கும் மதியுரைப் பணிகளை வழங்கி பன்னாட்டு வர்த்தகக் கண்காட்சிகளில் பங்கேற்ப தற்கான வசதிகளை வழங்குவதன் மூலம் உதவியளித்தது.

வாசனைத்திரவியங்களை பயிரிடுதல் மற்றும் பதனிடல் என்பவற்றிற்கான உதவித்தொகைக் கொடுப்பனவுத் திட்டங்களை அமுல்படுத்தி அவசியமான உள்ளீடுகள், தொழில்நுட்பத் தகவல்கள், விரிவாக்கப் பணிகள் என்பவற்றை வழங்குவதன் மூலம் ஏற்றுமதி வேளாண்மைத் திணைக்களம், ஏற்றுமதி வேளாண்மைத் துறையின் அபிவிருத்திக்கு தொடர்ந்தும் முக்கிய பங்கினை ஆற்றிவருகின்றது. எனினும் நிதிப்பற்றாக்குறை கார ணமாக ஏற்றுமதி வேளாண்மை உதவித்திட்டத்தின் கீழ் பகிர்ந்தளிக்கப்பட்ட உதவுதொகைகள் 2003 ஆம் ஆண்டில் ரூ.22.6 மில்லியனுக்கு மேலும் வீழ்ச்சியடைந்தன. 2002 ஆம் ஆண்டைப் போன்றே 50 சதவீதத்திற்கும் மேலான உதவித்தொகைக் கொடுப்பனவுகள் மிளகுக்கு வழங்கப்பட்டன. ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதியிடப்பட்ட இரண்டாவது நிரந்தரப்பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டமானது 2003 இல் தொடர்ந்தும் ஐந்தாவது ஆண்டாகவும் தொழிற்பட்டு எட்டு பங்குபற்றும் வங்கிகளினூடாக கொடுகடன் வசதிகளை வழங்குவதன் மூலம் பழப்பயிர்கள், வாசனைத்திரவியங்கள் மற்றும் அலங்காரச் செடிகள் துறை என்பவற்றுக்கு உதவியளித்தது. இரண்டாவது நிரந்தரப் பயிர் அபிவிருத்திச் செயற்றிட்டம் வேளாண்மைத் திணைக்களம் மற்றும் அதன் செயற்றிட்டங்களினூடாக நடுகைப் பொருட்களின் உற்பத்தி மற்றும் பண்ணை மதியுரை, சந்தைப்படுத்தல் தொழில்நுட்பப் பணிகள் என்ப வற்றின் வழங்கல் ஆகியனவற்றிற்கு தொடர்ந்தும் உதவியளித்தது.

## 3.4 உள்நாட்டு வேளாண்மை

### நெல்

2003 பயிர்ச்செய்கை ஆண்டில் நெல் உற்பத்தி முன்னெப்போதுமில்லாத உயர் மட்டமான 3,071 ஆயிரம் மெற்றிக் தொன்கள் (147 மில்லியன் புசல்களை அடைந்து 2000 இல் முன்னைய அதிஉச்ச உற்பத்தியின் 7 சதவீதத்தால் மிஞ்சிக் காணப்பட்டது. இரண்டு பருவங்களிலும் உற்பத்தி உயர்ந்த சாதனை மட்டங்களை அடைந்து சாதகமான காலநிலையும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் சண்டைகள் நிறுத்தப்பட்டமையும்

பொதுவான மேம்பாட்டிற்கு உதவின. இரண்டு பருவங்களிலும் விதைத்து அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு கணிசமானளவுக்கு அதிகரித்தது. பெரும்போக உற்பத்தி 2000 இன் முன்னைய சிறந்த பெரும்போக உற்பத்தியை விட 6.4 சதவீதத்தால் அதிகரித்தது. சிறுபோக உற்பத்தி 1999 இல் பதிவு செய்யப்பட்ட முன்னைய சிறந்த உற்பத்தியை விட 4.9 சதவீதத்தால் அதிகரித்தது. எனினும் இரண்டு பயிர்ச்செய்கைக் காலங்களிலும் நிலவிய போதியளவு மழை வீழ்ச்சியினால் வளம் குன்றிய நிலங்கள் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டதனால் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாகவும் ஆண்டுச் சராசரி விளைச்சல் வீழ்ச்சியடைந்தது. ஆண்டுச் சராசரி விளைச்சல் எக்டேயரொன்றுக்கு 3.8 மெற்றிக் தொன்களுக்கு 3 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. 2001 ஆம் ஆண்டில் அதிஉச்ச நிலையினை அடைந்ததன் பின்னர் தொடர்ச்சியாக இரண்டாவது ஆண்டாகவும் நெல்லின் ஆண்டுச்சராசரி விளைச்சல் வீழ்ச்சியடைந்த போதிலும் இலங்கையின் நெல் விளைச்சல் இப் பிராந்தியத்திலுள்ள ஏனைய நாடுகளை விட மிகவும் உயர்வானதாக விளங்குகின்றது. (சிறப்புக்குறிப்பு 7 இனைப் பார்க்கவும்) எனினும் இது உள்ளார்ந்த விளைச்சலைக் காட்டிலும் குறைவானதாகும்.




வரைபடம் 3.4
நெல் உற்பத்தி

பயிர்ச்செய்கைக்கான அதிகரித்த செலவுகளும் சிறு அளவிலான உற்பத்தியும் இலங்கையின் நெல் வேளாண்மையாளரொருவருக்கான மிகவும் குறைந்த சராசரி தேறிய வருமானத்தினை விளைவித்துள்ளன. நில உடைமைகள் துண்டாடப்பட்டுள்ளதால் பயிர்ச் செய்கை அலகு உறுதியாக வீழ்ச்சியடைந்து அளவு ரீதியிலமைந்த பொருளாதார நன்மைகளைக் கிடைக்காமல் செய்து உற்பத்திச் செலவினை உயர்த்துகின்றது. வளமாக்கி, வேளாண்மை இரசாயனங்கள், விதைநெல், இயந்திரங்கள் மற்றும் தொழிலாளர் போன்ற உள்ளீடுகளின் விலைகளும் தொடர்ந்து அதிகரித்து வருகின்றன. மொத்த உற்பத்திச் செலவில் கூலியானது பாரியளவு பங்கை உள்ளடக்கி 50 சதவீதத்திற்கும் மேலாக வகைகூறியது. மேலும் உச்ச பயிர்ச்செய்கை மற்றும் அறுவடைக் காலங்களில் தொழிலாளர்களுக்குப் பற்றாக்குறை நிலவுகிறது. மொத்த உற்பத்திச் செலவில் வளமாக்கி 12-15 சதவீதத்திற்கு வகைகூறுகிறது.

2002/ 2003 பெரும்போக காலத்தில் நெல் உற்பத்தியானது அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக விளைச்சலில் ஏற்பட்ட 5 சதவீத வீழ்ச்சிக்கு மத்தியிலும் 7 சதவீதத்தால் அதிகரித்தது. 27 வேளாண்மை மாவட்டங்களுள் வரண்ட மற்றும் இடைநிலை வலயங்களிலுள்ள 15 மாவட்டங்களில் உற்பத்தி அதிகரித்து வடமாகாணத்திலுள்ள அனைத்து மாவட்டங்களுக்கும் அதிகரித்த உற்பத்தியைப் பதிவுசெய்து மொத்த பெரும்போக வெளியீட்டில் 7 சதவீதத்திற்கு வகை கூறின. கடந்த ஆண்டினைப் போலவே அம்பாறை, குருநாகல், அநுராதபுரம், பொலநறுவை மற்றும் மகாவலி 'எச்' பிரதேசம் ஆகிய ஐந்து முக்கிய நெல் உற்பத்தி மாவட்டங்களுக்கும் கூட்டாக மொத்த பெரும்போக வெளியீட்டில் அரைவாசிக்கும் மேலானவற்றிற்கு வகை கூறின (52 சதவீதம்).

சிறுபோகத்தில் விளைச்சல் சிறிதளவு வீழ்ச்சியடைந்தமைக்கு மத்தியிலும் உற்பத்தி 8 சதவீதத்தால் அதிகரித்து சிறுபோக காலத்தில் அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு முன்னைய சிறுபோக காலத்தினை விட ஏறக்குறைய 9 சதவீதத்தினால் அதிகரித்தது. அநுராதபுர மாவட்டத்தில் உற்பத்தி 72 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் குறிப்பிடத்தக்க ஏனைய அதிகரிப்புக்கள் மகாவலி 'எச்'' வலயம் (38 சதவீதம்), அம்பாந்தோட்டை (34 சதவீதம்) மற்றும் திருகோணமலை (24 சதவீதம்) ஆகியவற்றிலிருந்து பதிவு செய்யப்பட்டன. மூன்று முக்கிய நெல் உற்பத்தி மாவட்டங்களான அம்பாறை, பொலநறுவை, குருநாகல் ஆகியன மொத்த சிறுபோக உற்பத்தியில் கிட்டத்தட்ட அரைவாசிக்கு (49 சதவீதம்) வகைகூறின. தொடர்ந்தும் பத்தாவது ஆண்டாகவும் அம்பாறை அதிகூடிய உற்பத்தியை பதிவுசெய்து மொத்த சிறுபோக உற்பத்தியில் கிட்டத்தட்ட ஐந்திலொரு பங்கிற்கு (19 சதவீதம்) வகை கூறியது.

நெல்லின பண்ணை அடிமட்ட விலை குறிப்பாக அறுவடைக் காலங்களில் வீழ்ச்சியடைந்து உண்மையான உற்பத்தியை விட மிகைப்படுத்தி கூறப்பட்ட உற்பத்தி மீதான தகவல்கள், விலைகள் மீதான மோசமான எதிர்பார்ப்புகளுக்கு இட்டுச்செல்கின்றன. எனவே எதிர்கால நெல் உற்பத்தி மீதான எறிவுகளைப் பரப்பும்போது பண்ணை அடிமட்ட விலைகள் மீதான தாக்கம் கவனத்தில் எடுக்கப்படல் வேண்டும். பண்ணை அடிமட்ட விலைகளுக்கு உதவும் வகையில் அரசாங்கம் 2001 மாச்சு 5 இலிருந்து இறக்குமதி செய்யப்படும் அரிசி

**அட்டவணை 3.6**
நெல்துறை மீதான புள்ளி விபரங்கள்

| விடயம் | அலகு | 2002 (அ) | | | 2003 (ஆ) | | |
|---|---|---|---|---|---|---|---|
| | | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் | பெரும் போகம் | சிறு போகம் | மொத்தம் |
| விதைக்கப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 510 | 342 | 852 | 602 | 381 | 983 |
| அறுவடை செய்யப்பட்ட மொத்த நிலப்பரப்பு | '000 எக்டேயர்கள் | 499 | 321 | 820 | 560 | 352 | 911 |
| அறுவடை செய்யப்பட்ட தேறிய பரப்பு | '000 எக்டேயர்கள் | 444 | 290 | 734 | 499 | 317 | 817 |
| உற்பத்தி | '000 மெற்றிக்தொன் | 1,774 | 1,086 | 2,860 | 1,895 | 1,177 | 3,071 |
| | '000 புசல்கள் | 85,002 | 52,027 | 137,029 | 90,785 | 56,372 | 147,157 |
| விளைச்சல் (இ) | கி.கி./ எக்டேயர்கள் | 3,990 | 3,742 | 3,895 | 3,794 | 3,709 | 3,761 |
| வழங்கப்பட்ட கொடுகடன் | ரூ. மில்லியன் | 234 | 315 | 549 | 445 | 493 | 938 |
| உ.வி.திட்டத்தின் கீழ்கொள்வனவு | '000 மெ.தொன்கள் | - | - | - | - | - | - |
| அரிசி இறக்குமதிகள் | '000 மெ.தொன்கள் | - | - | 95 | - | - | 35 |
| (நெல்லிற்குச் சமன்) | ('000 மெ.தொன்கள்) | - | - | 140 | - | - | 51 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) பெரும்போக, சிறுபோகத்திற்கான எக்டேயர் ஒன்றின் விளைவு பயிர் அறுவடை அளவீடுகளின் அடிப்படையில் அமைந்த குடிமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்திலிருந்து பெற்ற தரவுகளைக் கொண்டு கணக்கிடப்படுகின்றது. அதேவேளையில் மொத்த உற்பத்தியை அறுவடை செய்யப்பட்ட தேறிய நிலப்பரப்பால் பிரிப்பதன் மூலம் சராசரி விளைவு கணக்கிடப்படுகின்றது.

மூலங்கள்: வேளாண்மைத் திணைக்களம்.
வேளாண்மை கால்நடை வளர்ப்பு அமைச்சு.
குடிமதிப்புப் புள்ளி விபரத் திணைக்களம்
இலங்கைச் சுங்கம்.
இலங்கை மத்திய வங்கி.

மீதான சிறப்புத் தீர்வையினை கிலோகிறாமொன்றிற்கு ரூ.5 இலிருந்து ரூ.7 இற்கு அதிகரித்தது. இதனையடுத்து சிறுபோக உற்பத்தி கணிசமாக அதிகரித்ததைத் தொடர்ந்து 2001 ஒகத்து 19 இலிருந்து இது கிலோகிறாமொன்றிற்கு ரூ.9 ஆக மேலும் அதிகரிக்கப்பட்டது. விதைநெல் தேவைப்பாடு மற்றும் அறுவடைக்குப் பிந்திய இழப்புக்கள் என்பவற்றிற்கு சீராக்கம் செய்யப்பட்ட பின்னரான இவ்வாண்டுக்கான நெல் உற்பத்தி உள்நாட்டுத் தேவையின் 98 சதவீதத்திற்கு வகைகூறியது. எஞ்சிய தேவைப்பாடானது இறக்குமதி செய்யப்பட்டதுடன் இவ்வாண்டில் இறக்குமதி செய்யப்பட்ட அளவு 2002 இன் 95 ஆயிரம் மெற்றிக் தொன்களுடன் ஒப்பிடுகையில் 35 ஆயிரம் மெற்றிக் தொன்களாக விளங்கியது.

வேளாண்மைத் திணைக்களத்தின் இவ்வாண்டில் வெளியிடப்பட்ட போம்புவல, அம்பலாந்தோட்ட ஆகிய இடங்களில் இனப்பெருக்கம் செய்யப்பட்ட இரண்டு புதியரக உயர் விளைச்சல் தரும் நெல்லானது எதிர்காலத்தில் விளைச்சலை அதிகரிக்க உதவலாம்.

**ஏனைய களப் பயிர்கள்**

2003 இல் உருளைக்கிழங்கு, பெரிய வெங்காயம் தவிர்ந்த அவரை வகை தானியப்பயிர்கள், கிழங்கு மற்றும் ஏனையவையும் முன்னைய ஆண்டினை விட சிறந்த செயலாற்றத்தினைக் கொண்டிருந்தன. சோயா அவரை உற்பத்தி தொடர்ந்தும் இரண்டாவது ஆண்டாகவும் அதிகரித்து பயிர் செய்யப்பட்ட நிலப் பரப்பிலேற்பட்ட அதிகரிப்பு மற்றும் விளைச்சலில் ஏற்பட்ட மேம்பாடு என்பன காரணமாக இரண்டு மடங்கிற்கும் மேலான அதிகரிப்பினை பதிவுசெய்தது. உற்பத்திகளில் அதிகரிப்பினைப் பதிவுசெய்த ஏனைய அவரை வகைகளாக தட்டைப்பயறு (39 சதவீதம்), உழுந்து (17 சதவீதம்), பாசிப்பயறு (10 சதவீதம்) என்பன விளங்கின. தட்டைப்பயறு மற்றும் பாசிப்பயறு என்பவற்றின் உற்பத்திகளிலேற்பட்ட முழு மேம்பாட்டிற்கு பெரும்பாலும் பயிர்செய்கைக்கு உட்படுத்தப்பட்ட நிலப் பரப்பில் ஏற்பட்ட விரிவாக்கமே காரணமாகும். உழுந்து உற்பத்தியின் அதிகரிப்பிற்கு நிலப்பரப்பிலும் விளைச்சல் மட்டங்களிலும் ஏற்பட்ட அதிகரிப்புக்களே காரணமாகும்.

2003 இல் மிளகாய் உற்பத்தி 2002 இன் மட்டத்திலேயே காணப்பட்டது. எனினும் கடந்த பத்தாண்டுகளில் மிளகாய் உற்பத்தி தொடர்ந்து வீழ்ச்சியடைந்ததுடன் தற்போதைய உற்பத்தியானது 1990 களின் முற்பகுதியின் உற்பத்தியில் ஏறத்தாழ மூன்றிலொரு பங்காகவே காணப்படுகிறது. இதற்கு இறக்குமதி செய்யப்படும் மிளகாயுடன் உள்நாட்டு உற்பத்தியாளர்களினால் போட்டியிட இயலாதிருப்பதே முக்கிய காரணமாகும். உள்ளீடுகளின் விலைகள் முனைப்பாக அதிகரித்தமை மற்றும் தேக்கமுற்ற விளைச்சல் என்பன காரணமாக மிளகாய் உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளது.

உள்நாட்டு மிளகாய் உற்பத்தியாளர்களை பாதுகாக்கும் பொருட்டு 2002 மாச்சில் ஒரு கிலோ கிறாமிற்கு ரூ.30 கொண்ட சிறப்புத் தீர்வை விதிக்கப்பட்டது. இந்த சிறப்புத்தீர்வை 2003 ஆண்டு முழுவதும் அதே மட்டத்திலேயே பேணப்பட்டது.

1998 முதல் தொடர்ந்து அதிகரித்துச் சென்ற உருளைக்கிழங்கு உற்பத்தி பயிரிடப்பட்ட நிலப்பரப்பில் ஏற்பட்ட குறைப்பு மற்றும் சராசரி விளைச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சி என்பன காரணமாக 19 சதவீதமான வீழ்ச்சியைப் பதிவு செய்தது. உருளைக்கிழங்கு செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்ட உயர் பாதுகாப்பு

சிறப்புக்குறிப்பு 8

## இலங்கையின் நெல்விளைச்சல் வீதம் குறைவானதா?

இலங்கையின் நிலப்பரப்பில் ஒரு அலகுக்கான நெல் விளைச்சல் மிகவும் குறைவு என அடிக்கடி குறை கூறப்படுகிறது. ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுமிடத்து மிகவும் குறைந்த உற்பத்தித் திறன் காணப்படுவதால் நெற்செய்கையைக் கைவிட வேண்டுமெனவும் சிலர் குரலெழுப்புகின்றனர். எவ்வாறாயினும், இப்பிராந்தியத்தின் ஒப்பிடத்தகு நாடுகளின் விளைச்சல்களுடன் ஒப்பிடுமிடத்து, பெரும்பாலான நாடுகளின் விளைச்சல்களை விட இலங்கையின் சராசரி விளைச்சல் அதிகமாகக் காணப்படுகிறது. உதாரணமாக, இலங்கையின் விளைச்சல் தாய்லாந்து, மியன்மார், பாகித்தான் போன்ற பல முக்கிய அரிசி ஏற்றுமதி செய்யும் நாடுகளின் விளைச்சல்களை விட அதிகமாகக் காணப்படுகிறது. இலங்கையின் நெல் விளைச்சலை யப்பான், கொரியா போன்ற நாடுகளின் விளைச்சல்களுடன் ஒப்பிட முடியாது. காரணம் இந்நாடுகள் வெப்பக் காலநிலையையும் நீண்ட நாட்கால

வெப்ப வலயத்தின் முக்கிய அரிசி உற்பத்தி நாடுகளின் விளைச்சல்கள் (கிகி / ஹெக்)

| நாடு | 1999 | 2000 | 2001 | 2002 |
|---|---|---|---|---|
| இந்தியா | 3,236.1 | 2,852.3 | 2,131.5 | 2,839.5 |
| இந்தோனேசியா* | 4,251.9 | 4,400.7 | 4,387.9 | 4,473.2 |
| மடகாஸ்கர் | 2,128.4 | 2,050.8 | 2,195.2 | 2,196.2 |
| மியன்மார் | 3,240.5 | 3,383.4 | 3,417.4 | 3,674.2 |
| பாகித்தான் | 3.074.4 | 3,031.2 | 2,754.2 | 3.017.9 |
| பிலிப்பைன்ஸ் | 2,946.8 | 3.068.1 | 3,186.6 | 3,279.7 |
| **இலங்கை** | **3,672.0** | **3,856.4** | **3,954.3** | **3,895.2** |
| தாய்லாந்து | 2,424.5 | 2,612.8 | 2.618.6 | 2,564.1 |

மூலங்கள்: உணவு, வேளாண்மை அமைப்பு தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்

* இந்தோனேசியாவின் சில பகுதிகள் வெப்ப வலையத்தைச் சார்ந்தனவாக இருப்பதுடன் நீண்டநாட்#கால நீட்சியையும் கொண்டிருப்பதனால் அமோக விளைச்சல் ஏற்படுகிறது. மேலும் எரிமலை நடவடிக்கைகள் காரணமாக இந்தோனேசியாவின் மண் வளம் மிக்கதாகவுமுள்ளது.

நீரினையும் கொண்டிருக்கின்றமையுமேயாகும். இது ஒளித் தொகுப்புச் சேர்க்கை நடவடிக்கை மற்றும் அமோக விளைச்சல் என்பன ஏற்பட வகைசெய்கிறது.

உயர்ந்த இலாபத்தினை விளைவித்தமையினால் விதந்துரைக்கப்பட்ட சுழற்சிப் பயிர் நடைமுறைகளை பின்பற்றாது வேளாண்மையாளர்கள் அதே பயிர்ச்செய்கை நிலங்களில் மீண்டும் மீண்டும் உருளைக்கிழங்கினைப் பயிரிடுவதற்கு ஊக்கமளிக்கப்பட்டது. தொடர்ச்சியான உருளைக்கிழங்குச் செய்கையானது விளைச்சலை மிக மோசமாகப் பாதிக்கும் மண்ணிலிருந்து உருவாகும் நோய்களை ஏற்படுத்தும்.

சின்னவெங்காய உற்பத்தி 1 சதவீதத்தால் அதிகரித்த வேளையில் பெரிய வெங்காய உற்பத்தி 2 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது.

உள்நாட்டு உற்பத்தியில் ஏற்பட்ட வீழ்ச்சியின் தாக்கத்தின் பிரதிபலிப்பாக உருளைக்கிழங்கு, செத்தல்மிளகாய் இறக்குமதிகள் முறையே 7 சதவீதத்தாலும், 10 சதவீதத்தாலும் அதிகரித்தன.

### பழவகை மற்றும் காய்கறிகள்

2001 இல் மொத்த காய்கறி உற்பத்தி 5,52,000 மெற்றிக் தொன்களுக்கு 2 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டது. தாழ்நிலக் காய்கறி மற்றும் மலைநாட்டுக் காய்கறி என்பவற்றின் உற்பத்தியில் அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன. இவ்வாண்டில் காய்கறிகள் பயிரிடப்பட்ட நிலப்பரப்பு கிட்டத்தட்ட 3 சதவீதத்தினால் அதிகரித்தது. இது 2002/03 பெரும்போக நிலப்பரப்பில் ஏற்பட்ட 6 சதவீத அதிகரிப்பினதும் 2003 சிறுபோக காலத்தில் பயிரிடப்பட்ட நிலப்பரப்பில் ஏற்பட்ட 2 சதவீதமான வீழ்ச்சியினதும் இணைந்த விளைவாகும். எனினும் இவ்வாண்டில் காய்கறிகளின் உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்புக்களுக்கு மத்தியிலும் விலைகள் அதிகரித்துக் காணப்பட்டன. உற்பத்தியில் பெரும்பகுதி உள்ளூரில் நுகர்வு செய்யப்படுவதுடன் ஏற்றுமதிகள் உள்ளூர் உற்பத்தியில் 1 சதவீதத்திற்கும் குறைவாகக் காணப்படுகின்றன.

2003 இல் முழு மொத்த பழ உற்பத்தியில் அதிகரிப்பொன்று காணப்பட்டது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வாழைப்பழம், மாம்பழம், பப்பாளிப்பழம் என்பவற்றின் உற்பத்தி அதிகரித்தவேளையில் அன்னாசிப்பழ உற்பத்தி வீழ்ச்சியடைந்து காணப்பட்டது. எனினும் குறிப்பாக மீட்சி பெற்றுவரும் சுற்றுலாத் துறையிலிருந்தான உயர்ந்த கேள்வியின் விளைவாக விலைகள் அதிகரித்தன. 2003 இல் இலங்கை ரூ.1.8 பில்லியன் பெறுமதியுடைய 52,600 மெற்றிக் தொன்களுக்கும் அதிகமான உடன் மற்றும் உலர்ந்த பழவகைகளை இறக்குமதி செய்தது. மொத்த இறக்குமதிகளின் அளவில் அப்பிள்பழம் 43 சதவீதத்திற்கு வகைகூறியது.

இவ்வாண்டில் வேளாண்மைத் திணைக்களம் உயர் விளைச்சல் தரும் புதிய ரக பழங்கள், காய்கறிகள், இலைக்காய்கறிகள், வேர்ப்பயிர்கள் மற்றும் வாசனைத் திரவியங்கள் என்பவற்றை அறிமுகப்படுத்தியதுடன் பாதுகாக்கப்பட்ட சூழலில் மேற்கொள்ளப்படும் வேளாண்மை பற்றியும் அறுவடைக்குப் பின்னரான

பதனிடல் பற்றியதுமான பல பயிற்சித்திட்டங்களையும் மேற்கொண்டது. அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப நிறுவனம் இலங்கையில் பெருமளவு அதிகரித்துக் காணப்படும் போக்குவரத்தின் போதான அறுவடைக்குப் பின்னரான இழப்புக்களைக் குறைவடையச் செய்வதற்கான "உடன் உற்பத்தித் தொடர்" என்ற அவர்களது செயற்றிட்டத்தின் கீழ் கெப்பிட்டிப்பொல, மகாவலி "ஜி" மற்றும் "எச்" வலயங்கள் ஆகிய விடயங்களிலுள்ள சேகரிப்பாளர்களிடமிருந்து கொழும்பு மொத்த விற்பனைச் சந்தைக்கும், தம்பல்லையிலுள்ள சிறப்புப் பொருளாதார மையங்களிலிருக்கும் பழங்களையும் காய்கறிகளையும் ஏற்றி அனுப்புவதற்காக பிளாத்திக்கு பெட்டிகளை அறிமுகப்படுத்தியது. இச்செயற்றிட்டத்தின் கீழ் 5,836 பெட்டிகள் சேகரிப்பாளர்களால் கொள்வனவு செய்யப்பட்டிருப்பதுடன் அத்தகைய விநியோக முறைகள் தற்பொழுது தொழிற்பாட்டிலுள்ள அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்ப நிறுவனமானது அறுவடைக்குப் பின்னரான கையாளலை மேலும் அறுவடை செய்வதற்காக ஆராய்ச்சியை நடாத்துகின்றது. அறுவடைக்குப் பின்னரான இழப்பினைத் தவிர்த்தல் மற்றும் பெறுமதி கூட்டப்பட்ட வேளாண்மைப் பதனிடல் தொழில் நிறுவனங்களை அபிவிருத்தி செய்தல் போன்ற விடயங்களில் அரசு மற்றும் தனியார்துறை உற்பத்தியாளர்கள், பதனிடுவோர், வர்த்தகர்கள் மற்றும் விரிவாக்க அலுவலர்கள் ஆகியோரது அறிவினை மேம்படுத்துவதற்காக இது பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தியது.

2003 இல் முறையே ரூ.679 மில்லியன் மற்றும் ரூ.605 மில்லியன் பெறுமதி கொண்ட 9.4 மில்லியன் கிலோகிராம்களுக்கு மேற்பட்ட காய்கறிகள் மற்றும் 7.7 மில்லியன் கிலோகிராம் உடன் மற்றும் உலர்த்திய பழங்கள் என்பவை ஏற்றுமதி செய்யப்பட்டன. மேலும் ரூ.801 மில்லியன் பெறுமதியுடைய 7.6 மில்லியன் கிலோகிராம் கொண்ட பழவகையும், காய்கறி வகையும் ஏற்றுமதி செய்யப்பட்டன. பல வகையான பழங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டபோதும் அன்னாசி தவிர்ந்த ஒரு சில ஏற்றுமதி சார்ந்த பழங்கள் மட்டுமே வர்த்தக ரீதியாக பயிரிடப்படுகின்றன. கட்டுப்படுத்தப்பட்ட சூழலிலான பயிர்ச்செய்கைக்கு இழையங்களின் மூலம் விருத்தி செய்யப்பட்ட செடிகளைப் பயன்படுத்தவதன் மூலம் உற்பத்தியையும் அத்துடன் உற்பத்தியின் தரத்தினையும் அதிகரிக்க முடியும்.

### சீனி

2002 இல் செவனகலையிலுள்ள அரசின் 90 சதவீதமான பங்குகளினதும், பெல்வத்தையிலுள்ள 53 சதவீதமான பங்குகளினதும் விற்பனைகளை உள்ளடக்கிய இவ்விரண்டு தொழிற்சாலைகளிலும் அதிகரித்த உற்பத்திகளின் மூலம் சீனி உற்பத்தி சாதகமான பெறுபேறுகளைக் காட்டுகிறது. இதனால் சீனி உற்பத்தி முன்னைய மூன்று ஆண்டுகளாக உற்பத்திகளில் ஏற்பட்ட வீழ்ச்சிகளைத் தொடர்ந்து 54,365 மெற்றிக் தொன்களுக்கு 42 சதவீதத்தால் அதிகரித்தது. சீனி பெறல் வீதங்கள் வீழ்ச்சியடைந்தமையினால் பிழியப்பட்ட கரும்பின் அளவில் ஏற்பட்ட அதிகரிப்பே பெல்வத்தை மற்றும் செவனகலவின் உற்பத்திகள் முறையே 57 சதவீதத்தாலும், 18 சதவீதத்தாலும் அதிகரிக்கக் காரணமாவிருந்தது.

பெலவத்தையில் பிழியப்பட்ட கரும்பின் அளவு 67 சதவீதத்தினால் அதிகரித்தது. சொந்த மற்றும்

**அட்டவணை 3.7**
**சீனி உற்பத்தி மீதான புள்ளி விபரங்கள்**

| விடயம் | அலகு | செவனகலை சீனித் தொழிற்சாலை | | பெல்வத்தை சீனித் தொழிற்சாலை | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | 2002(அ) | 2003(ஆ) | 2002(அ) | 2003(ஆ) | 2002(ஆ) | 2003(ஆ) |
| 1. கரும்பு பயிரிடப்பட்ட நிலப்பரப்பு (முளை தோன்றியது) (இ) | எக்டேயர்கள் | 3,885 | 3,500 | 3,988 | 5,060 | 7,873 | 8,560 |
| 2. அறுவடை செய்யப்பட்ட நிலப்பரப்பு (இ) | எக்டேயர்கள் | 2,798 | 2,798 | 3,105 | 3,377 | 5,903 | 6,175 |
| 3. அறுவடை செய்யப்பட்ட கரும்பு (இ) | மெ.தொன்'000 | 151 | 196 | 104 | 212 | 255 | 407 |
| 4. தனியாரிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்ட கரும்பு | மெ.தொன்'000 | 0 | 0 | 163 | 234 | 163 | 234 |
| 5. பிழியப்பட்ட கரும்பின் அளவு | மெ.தொன்'000 | 163 | 196 | 267 | 445 | 430 | 641 |
| 6. சராசரி விளைச்சல் (இ) | மெ.தொன்/எக்டேயர் | 54 | 70 | 38 | 63 | 43 | 66 |
| 7. சீனி உற்பத்தி (கூட்டப்பட்டவை தவிர்ந்த) | மெ.தொன்'000 | 14 | 16 | 24 | 37 | 38 | 54 |
| 8. சீனி பெறப்பட்ட வீதம் (ஈ) | % | 8.40 | 8.29 | 8.94 | 8.39 | 8.77 | 8.36 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) முதன்மைத் தோட்டங்களையும் ஒதுக்கீட்டாளர்களையும் உள்ளடக்கும்.

மூலங்கள்: வரையறுக்கப்பட்ட பெல்வத்தை சீனிக் கைத்தொழில்கள்.
வரையறுக்கப்பட்ட செவனகலை சீனிக் கைத்தொழில்கள்.

(ஈ) $\text{சீனி பெறும் வீதம்} = \dfrac{\text{உற்பத்தி செய்யப்பட்ட சீனி}}{\text{ஆலையிடப்பட்ட கரும்பின் அளவு}} \times 100$

தனியார் கரும்புச் செய்கையில் ஏற்பட்ட மேம்பாடுகள் பொதுவான செயற்பாட்டிற்கு பங்களிப்புச் செய்தன. செவனகலைல் பிழியப்பட்ட கரும்பின் அளவு 20 சதவீதத்தினால் அதிகரித்தது. உள்நாட்டு உற்பத்தி தேசிய தேவைப்பாட்டில் 15 சதவீதத்திற்கு குறைவான அளவையே பூர்த்தி செய்கிறது.

வரைபடம் 3.5
மொத்தச் சீனிக் கிடைப்பனவு




வர்த்தக ரீதியான சீனிப் பயிர்ச்செய்கை பல தசாப்தங்களுக்கு முன்னராக ஆரம்பிக்கப்பட்டபோதிலும் இத்தொழிற்றுறை அமைப்பியல் ரீதியான பல பிரச்சினைகளை எதிர்கொண்டுள்ளது. குறைந்த விளைச்சல்கள், குறைவான பெறல் வீதங்கள் மற்றும் தொடர்ச்சியான தொழிலாளர் பிரச்சனைகள் என்பன இத்தொழிற்றுறையில் மோசமான தாக்கத்தினைக் கொண்டிருந்தன. மேலும் சீனியின் பன்னாட்டு விலைகளில் ஏற்பட்ட வீழ்ச்சியும் உள்ளூர் கைத்தொழிலில் எதிர்மறையான தாக்கத்தினைக் கொண்டிருந்தது. எனவே சீனி உற்பத்தி மட்டும் தனித்து ஒரு இலாபகரமான தொழில்முயற்சியாக இருக்காது. ஆகவே சீனி உற்பத்தி செய்யும் அதேவேளை இத்தொழில் துறையை ஆற்றல் மிக்கதாக மாற்றுவதற்கு இக்கைத்தொழிலானது நல்ல தரமுள்ள மதுசாரம் மற்றும் ஏனைய மதுபான வகைகளின் உற்பத்தியில் முதலீடு செய்ய வேண்டும்.

2003 இல் சீனி ஆராய்ச்சி நிறுவனம் அதனால் இனப்பெருக்கம் செய்யப்பட்ட இரு புதிய ரகங்களை வர்த்தக ரீதியான பயிர்ச்செய்கைக்கு விதந்துரைத்துள்ளது.

## 3.5 மீனும் கால்நடை வளர்ப்பும்

### மீன்

2003 இல் மொத்த மீன் உற்பத்தி 284,960 மெற்றிக் தொன்களுக்கு 5.4 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தது. மொத்த மீன் உற்பத்தியில் 89 சதவீதத்திற்கு வகைகூறும் கடல் மீன் உற்பத்தி (254,680 மெற்றிக்தொன்கள்) 6.8 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. இதற்கு மாறாக 2003 இல் நன்னீர் மற்றும் அலங்கார மீன் உற்பத்தி 30,280 மெற்றிக் தொன்களுக்கு 7.6 சதவீதத்தினால் அதிகரித்தது.

குறிப்பிட்ட சில வகையான மீன்பிடிச் சாதனங்களை பயன்படுத்துவதைத் தடைசெய்யும் புதிய சட்டங்கள் அமுல்படுத்தப்பட்டமை, கடற்றுறை மீன் உற்பத்தியின் வீழ்ச்சிக்கு ஒரளவு காரணமாகவிருந்தது. எனினும் கடற்றுறை மூலவளங்களின் மிதமிஞ்சிய பாவனையை குறைவடையச் செய்வதன் மூலம் இத்துறை நீண்டு நிலைத்திருப்பதை இச்சட்டங்கள் உறுதிப்படுத்துமாதலினால் இக்கொள்கையின் எதிர் மறையான தாக்கமானது ஒரு தற்காலிகமான நிகழ்வாகவே இருக்கும். 2003 மே, யூன் மாதங்களில் தென் மற்றும் வடமேற்கு கரையோர பிரதேசங்களில் மோசமான வானிலை நிலைமை காரணமாக மீன் பிடிக்கும் நாடுகள் இழக்கப்பட்டமையும், கடற்றுறை மீன் உற்பத்தியினை மோசமாகப் பாதித்தது. எனினும் இத்தொழிற்றுறையின் நீண்டகால வளர்ச்சியை உறுதிப்படுத்தும் முகமாக வெளிநாட்டு முதலீடு உள்ளிட்ட தனியார் முதலீடுகளைக் கவருவதற்காக மீன்பிடித் துறையில் பிரயோகித்த கொள்கைகளும் ஒழுங்குவிதிகளும் சீர்திருத்தப்பட வேண்டியுள்ளது. நன்னீர்த் தேக்கங்களில் உள்ள மீன்குஞ்சுகளின் இருப்பிலேற்பட்ட அதிகரிப்பின் முக்கிய காரணத்தினால் நன்னீர் மற்றும் பண்ணை மீன்களின் உற்பத்தி மேம்பாடடைந்தது.

**அட்டவணை 3.8**
**மீன் உற்பத்தி**

மெற்றிக் தொன்கள் '000

| துணைத்துறை | 2001 | 2002(அ) | 2003(ஆ) |
|---|---|---|---|
| கடல் (இ) | 255 | 273 | 255 |
| பண்ணை மீன் வளர்ப்பு | 30 | 28 | 30 |
| மொத்தம் | 285 | 301 | 285 |

மூலங்கள்: கடற்றொழில் நீர்வாழ் மூலவளங்கள் அபிவிருத்தி அமைச்சு
தேசிய நீரியல் மூலவள ஆராய்ச்சி அபிவிருத்தி முகவர்.

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) கரையோர மற்றும் ஆழ்கடல் துறைகள்.

2003 இல் மீன் மற்றும் மீன் சார்ந்த உற்பத்திகளின் ஏற்றுமதிகளினை மொத்த அளவு 14,714 மெற்றிக் தொன்களுக்கு 13.3 சதவீதத்தினால் அதிகரித்து நண்டு வகைகளின் ஏற்றுமதிகள் 6,741 மெற்றிக் தொன்களுக்கு 31 சதவீதத்தினால் அதிகரித்து மொத்த மீன் ஏற்றுமதியில் 45 சதவீதத்திற்கு வகைகூறியது. மீன் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ரூ.8,953 மில்லியனுக்கு 20 சதவீதத்தால் அதிகரித்தது. இவ்வாண்டில் அலங்கார மீன் ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் ரூ.623 மில்லியனாக விளங்கி முன்னைய ஆண்டினைக் காட்டிலும் 18 சதவீதத்தால் அதிகரித்தது.

2003 ஆம் ஆண்டில் மீன்பிடித் துறையிலான முக்கிய அபிவிருத்தியாக இலங்கை மீன்பிடிக் கூட்டுத் தாபனத்தின் வரையறுக்கப்பட்ட யூனியன் மீன்பிடிக்

கூட்டுத்தாபனத்திற்கும், ரஷ்யாவின் இன்போம் புரோகிரஸ் வங்கிக்குமிடையிலான கூட்டுமுயற்சியான முன்மொழியப்பட்டுள்ள மீனை தகரத்திலடைக்கும் தொழிற்சாலை விளங்குகிறது. இது இலங்கையின் மீன்பிடிக் கைத்தொழிலில் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்பட்ட தேவையை பூர்த்தி செய்யும். மதிப்பீடுகளின்படி இத் தொழிற்சாலை ஏற்றுமதிச் சந்தையையும், உள்ளூர்ச் சந்தையையும் இலக்காகக் கொண்டு நாளொன்றுக்கு 21.5 தொன்கள் தகரத்தில் அடைக்கப்பட்ட மீனை உற்பத்தி செய்யும். நவீன கலங்கள் மற்றும் குளிரூட்டப்பட்ட களஞ்சிய வசதிகளின் வழங்கல் மற்றும் கடல் வளங்களின் சிறந்த பயன்பாட்டிற்கான விரிவான ஆய்வுகள் என்பன, சட்டரீதியானதும், சட்டரீதியற்றதுமான வெளிநாட்டு மீன்பிடிக் கலங்களினால் ஏற்படுத்தப்படும் அச்சுறுத்தல்களிலிருந்து நாட்டின் மீன்பிடிக் கைத்தொழிலை பாதுகாப்பதற்கும் ஆழ்கடல் மீன்பிடியை ஊக்குவிப்பதனூடாக மேலும் நாட்டினைச் சூழவுள்ள கடல் வளங்களிலிருந்து முழுப்பயனையும் பெறுவதற்கும் இன்றியமையாததாகும்.

**கால்நடை**

கால்நடை வளர்ப்புத் துறையின் இரு முக்கிய துணைத்துறைகளான பாற்பண்ணை மற்றும் கோழி வளர்ப்பு என்பன முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2003 இல் சிறப்பாகச் செயலாற்றின. கிடைக்கத்தக்கதாகவுள்ள மதிப்பீடுகளின்படி பசும்பால் உற்பத்தி 156 மில்லியன் லீற்றர்களுக்கு 2 சதவீதத்தால் அதிகரித்தது. இதற்கு மாறாக எருமைப்பால் உற்பத்தி 30 மில்லியன் லீற்றர்களுக்கு சிறிதளவால் (0.4 சதவீதத்தால்) வீழ்ச்சியடைந்தது. இவ்வாண்டில் பாலின் உற்பத்தியாளர் விலை லீற்றர் ஒன்றிற்கு ரூ.15 ஆக மாற்றமின்றியிருந்தது. எனினும் விலங்குத்தீனின் விலைகள் அதிகரித்தமையினால் உற்பத்திச் செலவுகள் அதிகரித்துக் காணப்பட்டன.

தற்போதைய பால் நிரம்பலானது நாட்டின் தேவையில் ஏறத்தாழ 15 சதவீதத்தினை மட்டுமே ஈடுசெய்யப் போதுமானதாகவுள்ளது. எஞ்சியவை பெரும்பாலும் பால்மா வடிவில் இறக்குமதி செய்யப்படுகிறது. இவ்வாண்டில் 67,941 மெற்றிக் தொன்கள் பாலும் பாலினை அடிப்படையாகக் கொண்ட உற்பத்திகளும் இறக்குமதி செய்யப்பட்டதுடன் ரூ.11.5 மில்லியன் கொண்ட இறக்குமதிச் செலவினை ஏற்படுத்தியது.

2003 இல் கோழி இறைச்சி உற்பத்தி 3.6 சதவீதத்தினால் அதிகரித்தவேளையில் முட்டை உற்பத்தி 884.8 மில்லியன் முட்டைகளுக்கு சிறிதளவால் வீழ்ச்சியடைந்தது. விலங்குத்தீனுக்கான அதிகரித்த செலவினமும், குளிரூட்டப்பட்ட அறைகள் போன்ற மட்டுப்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளும் உற்பத்தியாளர்களின் இலாப அளவினைக் குறைத்தன. கோழிக்குஞ்சு உற்பத்தி 5.3 சதவீதத்தினால் 74 மில்லியன் கோழிக்குஞ்சுகளாக அதிகரித்தது.

கால்நடை வளர்ப்புக் கைத்தொழிலினை அபிவிருத்தி செய்வதற்கான மிகப்பெரிய தடையாக விருந்தது விலங்குத்தீனுக்கான அதிகரித்த செலவினமாகும். 2003 இல் விலங்குத்தீனுக்கான செலவினம் 10 சதவீதத்திற்கும் மேலாக அதிகரித்தது. தற்பொழுது விலங்குத்தீன் அரைத்தலானது இறக்குமதி செய்யப்பட்ட விலை கூடிய மூலப்பொருட்களை பயன்படுத்திச் செய்யப்படுகிறது. விலங்குத்தீன் தயாரிப்புக் கைத்தொழிலில் உள்ளூர் மூலப்பொருட்களின் பயன்பாட்டினை ஊக்குவிப்பதன் மூலம் இதனைக் குறைக்கமுடியும். பாற்பண்ணைத்துறையின் விரிவாக்கத்தினை கடுமையாகக் கட்டுப்படுத்தும் மற்றுமொரு காரணியாக நல்ல தரமுள்ள விலங்குகள் கிடைக்காமை காணப்படுகிறது. பசுமாடுகளை அதிகரித்திருப்பதற்கான முக்கிய நிகழ்ச்சித்திட்டங்களில் ஒன்றாக, செயற்கை முறைக் கருத்தரித்தல் மூலம் விலங்குகளின் தொகைகள் அதிகரித்துக் காணப்படுகிறது.

## 3.6 உள்ளீடுகள்

**வளமாக்கி**

2003 இல் மொத்த வளமாக்கி விற்பனைகள் 10 சதவீதத்தால் 592,000 மெற்றிக் தொன்களுக்கு வீழ்ச்சியடைந்தன. நெல் மற்றும் தேயிலைத் துறைகளுக்கான வளமாக்கி வழங்கலில் ஏற்பட்ட வீழ்ச்சியே இதற்கான முக்கிய காரணமாகும். பன்னாட்டுச் சந்தையில் விலைகள் அதிகரித்ததைத் தொடர்ந்து 2002 ஒத்தோபரில் வளமாக்கி உதவுதொகைத் திட்டம் திருத்தியமைக்கப்பட்டதன் விளைவாக வளமாக்கி விலைகள் உயர்வடைந்து 2003 இல் நெற்றுறைக்கான வளமாக்கி விற்பனை 18 சதவீதத்தால் வீழ்ச்சியடைந்தன. வரட்சியின் காரணமாக 2003/04 பெரும்போகத்தில் நெல் பயிரிடப்பட்ட பரப்பளவில் ஏற்பட்ட வீழ்ச்சியானது நெல்லுக்கான வளமாக்கி பாவனையில் குறைப்பினை விளைவித்தது. ஈராக்

வரைபடம் 3.6
வளமாக்கிப் பயன்பாடு - முக்கிய பயிர் வகைகள்
(1990 = 100)



யுத்தத்தினால் தோற்றுவிக்கப்பட்ட நிச்சயமற்ற தன்மைகளின் காரணமாக கொழும்பு ஏலங்களின் ஆண்டின் முதலரைப்பகுதியில் நிலவிய குறைந்த விலைகளின் விளைவால் 2003 இல் தேயிலைக்கான வளமாக்கி வழங்கலும் 7 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. எனினும், இவ்வாண்டில் இறப்பர் மற்றும் தெங்குக்கு கவர்ச்சிகரமான விலைகளின் காரணமாக இறப்பர் மற்றும் தெங்குத் துறைகளுக்கான வளமாக்கி வழங்கல்கள் அதிகரித்தன.

**அட்டவணை 3.9**
**பயிர்களின் படியான வளமாக்கிப் பயன்பாடு**

'000 மெற்றிக் தொன்கள்

| பயிர் | 2001 | 2002(அ) | 2003(ஆ) |
|---|---|---|---|
| நெல் | 279 | 356 | 286 |
| தேயிலை | 187 | 185 | 167 |
| இறப்பர் | 9 | 7 | 8 |
| தெங்கு | 30 | 38 | 39 |
| ஏனைய களப் பயிர்கள் | 30 | 42 | 58 |
| ஏனைய ஏற்றுமதிப் பயிர்கள் | 9 | 8 | 10 |
| ஏனையவை | 36 | 34 | 24 |
| மொத்தம் | 580 | 670 | 592 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது. மூலம்: தேசிய வளமாக்கிச் செயலகம்.
(ஆ) தற்காலிகமானவை.

2002 ஒத்தோபரில் திருத்தியமைக்கப்பட்ட வளமாக்கி உதவுதொகைத் திட்டம் 2003 இலும் தொடர்ந்து 2003 இறுதியில் யூரியாவுக்கான மொத்த உதவுதொகை கொடுப்பனவுகள் ரூ.2.5 பில்லியனாக விளங்கின. திருத்தப்பட்ட திட்டத்தின் கீழ் யூரியா இறக்குமதியாளருக்கு மெற்றிக் தொன் ஒன்றிற்கு ரூ.6,000 கொண்ட நிலையான தொகையொன்று உதவுதொகை கொடுப்பனவாக வழங்கப்படுகிறது. எனினும் முக்கிய தானிய உற்பத்தி நாடுகளிலிருந்தான அதிகரித்த கேள்வி மற்றும் பெற்றோலிய விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பன காரணமாக யூரியாவின் பன்னாட்டு விலைகள் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2003 இல் 30 சதவீதத்தால் அதிகரித்தது. இது உள்ளூர் சந்தையில் யூரியாவின் விலையில் அதிகரிப்பொன்றினை விளைவித்தது.

### விதை

சான்றுபடுத்தப்பட்ட விதையின் உற்பத்தி தனியார் துறையினரால் மேற்கொள்ளப்படுகிறது. வேளாண்மைத் திணைக்களம் விதந்துரைக்கப்பட்ட நெல்லினங்களின் ஆதார விதைகளையும், பதிவு செய்யப்பட்ட விதைகளையும் உற்பத்தி செய்து அவற்றைப் பதிவு செய்ய விதை வளர்ப்பாளர்களுக்கும் வேளாண்மையாளர்களது அமைப்புக்களுக்கும் விதைகளை பெருக்க வைப்பதற்காக வழங்கியது. 2003 இல் வேளாண்மைத் திணைக்களம் விதந்துரைக்கப்பட்ட 22 நெல் இனங்களின் 166 மெற்றிக் தொன்கள் (8,000 புசல்கள்) ஆதார விதைகளையும், 1,706 மெற்றிக் தொன்கள் (82,000 புசல்கள்) பதிவு செய்யப்பட்ட விதைகளையும் உற்பத்தி செய்து தனியார் துறை வளர்ப்பாளர்களுக்கும் வேளாண்மையாளர்களது அமைப்புக்களுக்கும் வழங்கியது. இவ்வாண்டில் உற்பத்தி செய்யப்பட்ட சான்றுப்படுத்தப்பட்ட விதைகளின் அளவு 14,581 மெற்றிக் தொன்களுக்கு (701,000 புசல்கள்) 14 சதவீதத்தினால் அதிகரித்தது. இது மொத்த தேசிய விதைநெல் தேவையின் 16 சதவீதத்தினை மட்டுமே பூர்த்தி செய்யப் போதுமானதாகவிருந்ததுடன் கேள்வியின் பெரும் பங்கினை தரம் குறைவாகவிருக்கக் கூடிய சொந்த உற்பத்தியிலிருந்தே பூர்த்தி செய்ய வேண்டியிருந்தது.

வேளாண்மைத் திணைக்களம் குறைந்த செலவு கொண்ட வைரஸ் அற்ற விதை உருளைக்கிழங்குகளை அபிவிருத்தி செய்வதற்கென ஆரம்பிக்கப்பட்ட விதை உருளைக்கிழங்கு உற்பத்தி சிறப்பு நிகழ்ச்சித்திட்டத்தை தொடர்ந்து மேற்கொண்டது. அபிவிருத்தி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்கு இனங்கள் பெருக்கங்களுக்காக ஒப்பந்த அடிப்படையிலான பயிர்ச்செய்கையாளர்களுக்கு வழங்கப்பட்டன. இவ்வாண்டில் விதை உருளைக்கிழங்கு இறக்குமதிகள் ரூ.347 மில்லியன் பெறுமதியுடைய 5,030 மெற்றிக் தொன்களாக விளங்கின.

வேளாண்மைத் திணைக்களம் இவ்வாண்டில் ஏனைய களப்பயிர்களின் 5,500 கிலோகிறாம் ஆதார விதைகளையும், 15,100 கிலோகிறாம் பதிவு செய்யப்பட்ட விதைகளையும் வேளாண்மையாளர்களிடையே பகிர்ந்தளிப்பதற்கும் அரசாங்கப் பண்ணைகளில் பெருக்கல் செய்வதற்குமென உற்பத்தி செய்தது. அரச பண்ணைகளிலும் ஒப்பந்தப் பண்ணைகளிலும் உற்பத்தி செய்யப்பட்ட சான்றுப்படுத்தப்பட்ட ஏனைய களப்பயிர்களின் விதைகள் 81,000 கிலோகிறாம்களை விஞ்சிக் காணப்பட்டன. வேளாண்மைத் திணைக்களம் அரச பண்ணைகளுக்காகவும் ஒப்பந்தப் பண்ணைகளுக்காகவும் தரமான காய்கறி விதைகளை தொடர்ந்தும் உற்பத்தி செய்தது. 2003 இல் வேளாண்மைத் திணைக்களத்தினால் இரண்டு துறைகளுக்குமான உற்பத்தி செய்யப்பட்ட தரமான காய்கறிவிதைகள் 8,900 கிலோகிறாம்களாக விளங்கின. விதை வர்த்தகம் தாராளமயப்படுத்தப்பட்டது முதல் கிட்டத்தட்ட முழு வெளிநாட்டு காய்கறி விதை இருப்புக்களும் தனியார் துறையினரால் இறக்குமதி செய்யப்பட்டது. 2003 இல் காய்கறி விதைகளின் இறக்குமதிகள் ரூ.167 மில்லியன் பெறுமதியுடைய 304 மெற்றிக் தொன்களாக விளங்கின.

### வேளாண்மை இரசாயனங்கள்

கிருமித்தடுப்புப் பதிவாளரின் தற்காலிக மதிப்பீடுகளின்படி 2003 இல் விற்பனை செய்யப்பட்ட வேளாண்மை இரசாயனங்களின் (களை கொல்லிகள், பூச்சி கொல்லிகள், பங்கசுக் கொல்லிகள்) அளவு 6 சதவீதத்தால் அதிகரித்தது. மொத்த வேளாண்மை இரசாயனங்களின் விற்பனைகளில் ஏறத்தாழ 52 சதவீதத்திற்கு வகைகூறும் களைகொல்லிகளின் அளவு 3,441

மெற்றிக் தொன்களுக்கு 22 சதவீதத்தால் அதிகரித்தது. இதற்கு மாறாக பூச்சிகொல்லிகளினதும், பங்கசுக் கொல்லிகளினதும் பாவனை முறையே 7 சதவீதத்தினாலும், 6 சதவீதத்தினாலும் வீழ்ச்சியடைந்தது. தொழிலாளர்களுக்கான பற்றாக்குறையின் காரணமாக கைகளினால் களைபிடுங்குவது பெருமளவு செலவு மிக்கதாக இருப்பதனால் வேளாண்மையாளர்கள் களை கொல்லிகளை தேர்ந்தெடுக்கின்றனர்.

### 3.7 காடாக்கல்

காடாக்கல் திணைக்களம் வெளிநாட்டுக் கொடை முகவர்களின் உதவியுடன் காடாக்கல் அபிவிருத்தியுடன் தொடர்புடைய பல செயற்றிட்டங்களை தொடர்ந்தும் மேற்கொண்டது. ஆசிய அபிவிருத்தி வங்கி வள மூலவள முகாமைத்துவ செயற்றிட்டத்தினையும் மேல் நீர்தேக்க முகாமைத்துவ செயற்றிட்டத்தினையும் நடைமுறைப் படுத்துவதற்காக தொடர்ந்தும் நிதியளித்தது. இச் செயற்றிட்டங்களின் கீழ் தாங்கிருப்பு வலய மரநடுகை, தாங்கியிருப்பு வலய மற்றும் மரப்பண்ணை பராமரிப்பு வீட்டு மர வளர்ப்பினை அபிவிருத்தி செய்தல், அருவி பாயுமிடத்து அருகாமையிலான மரநடுகை, கன்று உற்பத்தி செய்தல், எல்லைகளை அளவீடு செய்தல், இயற்கைக் காடுகளின் எல்லையை குறியிடல் போன்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

அலுவலர் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்கள், விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள், விரிவாக்கப் பணிகள் போன்ற நடவடிக்கைகள் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்களின் கீழ் நிதியளிக்கப்பட்ட உலக சுற்றாடல் வசதியளிக்கும் செயற்றிட்டத்தின் கீழ் இவ்வாண்டில் மேற்கொள்ளப்பட்டன. உலக வங்கியினால் நிதியளிக்கப்பட்ட மருத்துவ மூலிகைப் பயிரிடல் செயற்றிட்டமானது இவ்வாண்டில் அநுராதபுரம், காலி, மாத்தளை, மொனராகலை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களில் அதன் நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொண்டது.

இலங்கை அரசாங்கத்தினாலும், அவுத்திரேலிய அரசாங்கத்தினாலும் கூட்டாக நிதியிடப்பட்ட இலங்கை அவுத்திரேலிய இயற்கை மூலவளங்கள் முகாமைத்துவச் செயற்றிட்டம் 2003 பெப்புருவரியில் அதன் முன்னோடி நடவடிக்கைகளை குருநாகல் மாவட்டத்தில் தொடங்கியது. இலங்கையில் வரண்ட வலயத்தில் உள்ள வளம் குன்றிய கிராமங்களில் வாழ்க்கை முறையையும் வருமானங்களையும் மேம்படுத்துவதன் பொருட்டு இந்தச் செயற்றிட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இச்செயற்றிட்டமானது இலங்கையில் இயற்கை வள முகாமைத்துவத் துறையில் தொழிற்படும் பெரும் எண்ணிக்கையான நலவுரித்து உடைமையாளர்களுடன் தொடர்புகளை உருவாக்கும். இச்செயற்றிட்டத்தினை நடைமுறைப் படுத்தும் மேலாண்மையாக காடாக்கல் திணைக்களம் விளங்கும்.

சில பெருந்தோட்ட முகாமைத்துவ கம்பனிகள் அவற்றின் உற்பத்திக்கு பயன்படுத்த முடியாத நிலையிலிருக்கும் நிலங்களை காட்டுமரங்களை பயிரிடுவதற்காக பன்முகப்படுத்தியுள்ளன. அரசாங்கமும் இந்தப் பன்முகப்படுத்தலை ஊக்குவித்ததுடன் இது பெருந்தோட்டத்துறையில் மேலதிக வருமானத்தை உருவாக்குவதற்கு உதவுகின்றவேளையில் சுற்றாடல் நிலைமைகளையும் மேம்படுத்தும். பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சின் படி ஆசிய அபிவிருத்தி வங்கியினதும் பன்னாட்டு ஒத்துழைப்பிற்கான யப்பானிய வங்கியினதும் நிதியிடலின் கீழ் நடைமுறைப்படுத்தப்பட்ட பெருந்தோட்ட அபிவிருத்தி செயற்றிட்டத்தின் கீழ் 9,500 எக்டேயர்கள் கொண்ட தோட்ட நிலங்கள் காடாக்கலுக்காக பன்முகப்படுத்துவதற்கென அடையாளம் காணப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.10**
**காடாக்கல் துறை மீதான புள்ளி விபரங்கள்**

| வியடம் | அலகு | 2001 | 2002 (அ) | 2003 (ஆ) |
|---|---|---|---|---|
| 1. மொத்தக் காட்டுத் தொகுதி உள்ளடக்கம் (இ) | '000 எக்டேயர்கள் | 2,119 | 1,942 | 1,942 |
| மூடப்பட்ட காடுகள் (ஈ) | '000 எக்டேயர்கள் | 1,583 | 1,471 | 1,471 |
| பரந்த காடுகள் | '000 எக்டேயர்கள் | 464 | 472 | 472 |
| சதுப்பு நிலக் காடுகள் | '000 எக்டேயர்கள் | 8,687 | 9,504 | 9,531 |
| 2. காடு அழிக்கப்பட்ட நிலப்பரப்பு (உ) | எக்டேயர்கள் | 314 | 511 | 950 |
| 3. மீள் காடாக்கப்பட்ட பரப்பு (ஊ) | எக்டேயர்கள் | 840 | 661 | 1,057 |
| 4. பதிவுசெய்யப்பட்ட காடு சார்ந்த குற்றங்களின் எண்ணிக்கை | எண்ணிக்கை | 4,344 | 4,157 | 3,093 |
| கண்டுபிடிக்கப்பட்ட மரங்களின் அளவு | கன மீற்றர்கள் | 4,201 | 4,527 | 2,789 |
| கண்டுபிடிக்கப்பட்ட மரங்களின் பெறுமதி | மில். ரூபா | 58.0 | 47.6 | 24.1 |

(அ) திருத்தியமைக்கப்பட்டது.
(ஆ) தற்காலிகமானவை.
(இ) 2002இல் மொத்தக் கடனானது நவீன செய்மதி பிம்பத்தினையும் வான் படங்களையும் பயன்படுத்தி பூரணப்படுத்தப்பட்ட எண்தொகைகள் பின்னர் மொத்தக் காட்டுப் பிரதேசமானது குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சியடைந்துள்ளதைக் காட்டுகின்றது.
(ஈ) சதுப்பு நிலக் காடுகள் உட்பட.
(உ) மதிப்பீடுகள்.
(ஊ) பங்கேற்பு காடாக்கல் செயற்றிட்டத்தில் உள்ள பரப்புக்கள் நீங்காலாக.

மூலம்: காட்டுத் திணைக்களம்.

அரசமரக்கூட்டுத்தாபனம் பொதுமக்களுக்கும், தனியார் துறையினருக்கும் தொடர்ந்தும் மரங்களை வழங்கி வருகின்றது. மரக்குத்திகள், அரியப்பட்ட பலகை மற்றும் விறகு என்பவற்றின் மொத்த வெளியீடு 2002 ஆண்டுடன் ஒப்பிடும்போது 2003 இல் 194,000 கன மீற்றர்களுக்கு 6 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.

*சிறப்புக்குறிப்பு 9*

## வெப்பவலய வன பாதுகாப்புச் சட்டம் என்றால் என்ன?

குறைந்த, நடுத்தர வருமானமுடைய நாடுகள் வன மற்றும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கென உள்நாட்டு நாணயத்தில் பெற்ற கடன்களின் ஒரு பகுதியை பதிலீடு செய்யும் வகையில், ஐக்கிய அமெரிக்க அரசினால் இந்நாடுகளுக்கு சலுகை அடிப்படையிலான கடன்களை வழங்கவென வெப்ப வலய வன பாதுகாப்புச்சட்டம் 1998 இல் இயற்றப்பட்டது. இக்கொடையானது காடு புதுப்பித்தல், சிறந்த இயற்கை வளப் பாதுகாப்பு முறைமையைச் செயற்படுத்தல், பூங்காக்கள், பாதுகாப்பிடங்களின் நிறுவுகையும் பராமரிப்பும், பாதுகாப்பு முகாமைத்துவத்தில் பயிற்சி வழங்குகை, மிருக, தாவர இனப் பாதுகாப்பு, வெப்ப வலயக் காட்டுத் தாவரங்களின் மருத்துவப் பயன்பாடுகள் பற்றிய ஆராய்ச்சி, வெப்ப வலயக் காடுகளுள் அல்லது அவற்றினை அண்டிய பகுதிகளில் வாழும் மக்களதும் இனத்தவர்களதும் வாழ்க்கைக்கு உதவுதல் போன்றவற்றை உள்ளடக்கும்.

தகுதிபெற்ற நாடுகளுக்கிடையேயான இரு உடன்படிக்கைகள் மூலம் இச்சட்டம் நடைமுறைப் படுத்தப்படுகின்றது. ஏற்கனவே ஐக்கிய அமெரிக்க அரசுடன் ஆறு நாடுகள் இவ் உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளன. அவையாவன- வங்காளதேசம், பீலிசு, எல்சல்வடோர், பனாமா, பெரு, பிலிப்பைன்ஸ் என்பனவாகும். இவ் உடன்படிக்கைகள் இந்நாடுகளின் வெப்பவலய வனப் பாதுகாப்புக்கென இவ் உடன்படிக்கை காலகட்டத்தின்போது 60 மில்லியனுக்கும் மேற்பட்ட ஐ.அ.டொலர் தொகையைப் பெற்றுக் கொடுப்பனவாகும். இக்கொடைகளின் மூலம் நிதியிடப்படும் செயற்றிட்டங்கள் நன்மைபெறும் நாட்டினால் உருவாக்கப்பட்ட சபையொன்றின் மூலம் நிருவகிக்கப்படும். இச்சபை நிதி சரியான முறையில் பயன்படுத்தப்படுவதற்கு முழுமையான பொறுப்பு கூறவேண்டியிருத்தலுடன் இது நன்மைபெறும் நாட்டில் அரச பிரதிநிதிகள், சுற்றாடல், சமூக அபிவிருத்தி, விஞ்ஞானம், கல்விசார் மற்றும் காடாக்கல் அமைப்புக்களின் பிரதிநிதிகளையும், ஐக்கிய அமெரிக்க அரசாங்கத்தின் ஒன்று அல்லது அதற்குக் கூடுதலான அலுவலர்களையும் உள்ளடக்கியிருக்கும்.

வெப்ப வலய வனப் பாதுகாப்புச் சட்டப்படி, உரிய தகுதியைப்பெற அபிவிருத்தியடைந்து வரும் நாடுகள் பூகோள அல்லது பிராந்திய ரீதியாக முக்கியத்துவம் பெற்ற வெப்ப வலயக் காட்டைக் கொண்டிருத்தல் வேண்டும். மேலும், அரசாங்கங்கள் சனநாயக ரீதியாக தெரிவு செய்யப்பட்டவையாகவும் பன்னாட்டு போதைப்பொருள் கட்டுப்பாட்டு நடவடிக்கைகட்கு ஒத்துழைப்பு வழங்குவனவாகவும், தகுந்த பொருளாதார சீர்திருத்த நிகழ்ச்சித்திட்டத்தைக் கொண்டனவாகவும் இருத்தல் வேண்டும். மேலும் இவ் அரசாங்கங்கள் பன்னாட்டுப் பயங்கரவாதத்தை ஆதரிப்பனவாகவோ அல்லது மனித உரிமைகளை மீறுவனவாகவோ இருத்தல் ஆகாது. வெப்ப வலய வன பாதுகாப்புச் சட்டத்தின கீழ் இலங்கை இந்நன்மைகளைப் பெற தகுதியுடையதென ஐக்கிய அமெரிக்க அரசாங்கம் பிரகடனம் செய்துள்ளது. எனினும் இலங்கை இன்னமும் எந்தவொரு உடன் படிக்கையையும் மேற்கொள்ளவில்லை.

காடுகளைப் பாதுகாப்பது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகும். உலக நாடுகளில் ஏறத்தாழ அரைப்பகுதி காடுகள் கற்கடக ரேகைக்கும் மகர ரேகைக்கும் இடையே உள்ளதுடன் பூமியின் நிலப்பரப்பளவில் 6 சதவீதத்தை உள்ளடக்குகின்றது. இவை வெவ்வேறுபட்ட மிருகங்களையும், தாவர வளங்களையும் கொண்டுள்ளன. உயரம், காலநிலை, மண் வகைகள் என்பவற்றின் வேறுபாடுகளுக்கேற்ப இவை வேறுபட்டுக் காணப்படுகின்றன. புதர்கள், மூலிகைகள், பாலூட்டிகள், பறவைகள், ஊர்வன, நீர்நிலப் பிராணிகள், பூச்சிகள் போன்ற இன்னோரன்ன பிற உயிரினங்களிலும் பன்மைத்தன்மை காணப்படுகின்றன. மேலும், இவ் வெப்ப வலயக் காடுகள் மரம், விறகு, பழங்கள், விதைகள், பிரம்பு, மருத்துவ மூலிகைகள், மரக்கறி, இறைச்சி எனப் பெறுமதி வாய்ந்த பிறபல பொருட்களையும் வழங்குகின்றன. பெருந் தொகையான மக்கள் வேட்டையாடலுக்கும் மீன்பிடித்தலுக்கும் இக்காடுகளில் தங்கியுள்ளனர். வெப்ப வலயக் காடுகள் மனித இனத்துக்கு வேறும் பல சூழலியல் நன்மைகளை வழங்குகின்றன. உதாரணமாக வெப்ப வலயக் காடுகள் கரியமில வாயுவை உறிஞ்சி பிராணவாயுவை வெளிவிடுவதன் மூலம் கரியமில வாயுவின் அளவைக் குறைத்து உலக வெப்பத்தை தணிக்கின்றது. மரங்களும் நீரோட்டங்களைக் கட்டுப்படுத்துவதுடன் மண்ணரிப்பு, திடீர்வெள்ளம் போன்றவற்றையும் தடுத்துதவுகின்றன.

இலங்கை பல்வேறு காரணிகளால் அதன் காடு சிதைவடைந்து போகாமலிருப்பதற்கான பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும். இவ்விடயத்தில் காடுகளைப் பாதுகாப்பதற்கான வழிமுறைகளை மேற்கொள்வதில் நிதியியல் உதவிகள் முக்கிய பங்கினை வகிக்கும். எனினும் நிதியியல் உதவிகள் இலங்கையின் காடுகளைப் பாதுகாக்கும் நடவடிக்கைகளை மேம்படுத்தக்கூடிய இலங்கையர் அனைவருக்குமான நன்மையளிக்கக்கூடிய வழிமுறைகளைக் கொண்ட நிபந்தனைகளுடன் கூடியதாயிருத்தல் வேண்டும்.